REGD. M. 4642.

# திராவிடநாடு

மலர் 6 | 17—8—47 | இதழ் 12

# யோசிப்பீர்!

[ புதுவைச் சிவம் ]

சேந்தமிழர் தமையிகழ்ந்த வடவர் தம்மின்
சேருக்கடக்கி வாழ்ந்தவரின் வழியில் வந்தோர்,
நிந்தைமிகும் வாழ்வேற்று வெயிற்புழுப்போல்
நீள்துயரில் துடிக்கின்றார் பல்லாண்டாக!
விந்தையுறும் இந்நிலைக்குக் காரணந்தான்
விளம்புதற்கோ உளம் நாணும்! இந்நாட்டில்
சிந்தனையை மேற்கோள்வோர் அற்றதாலே,
தீமையிந்த நாளினிலும் வாழுதிங்கே!

ஒருசிலவாய் வாழ்கின்ற ஆரியம் தான்
உயர்வாழ்வில் எக்களிப்புக் கோள்ளுகின்றது
பேருமக்கள் என்றாலும் திராவிடத்தார்,
பிழைநேறியை ஏற்றதனால் கேடேகோண்டார்!
உருவழிந்த கோலத்தில் இந்த நாட்டார்!
ஒதிபெருத்த மாதிரியாய் ஓடிவந்தோர்!
இருகண்ணும் குருடில்லை மக்களுக்கே;
'ஏன்?' என்ற சிந்தனைதான் தோன்றவில்லை!

வடநாட்டார் வாணிபத்தின் வேந்தராகி
வளமிக்க தென்னாட்டைச் சுரண்டுகின்றார்!
அடல்மிக்க திராவிடரோ 'மாய வாழ்வில்'
ஆசையுற்றே, அவனடியை நாடுகின்றார்!
கேடுமதியைக் கோண்டவர்கள் வாழ்வதுண்டோ?
கீழ்நிலையைச் சகித்திடுவோர் உயர்வதுண்டோ?
படிமீது விதிநம்பி வாழும் மக்கள்
பாழ்நிலையை யடையாம லிருப்பதுண்டோ?

வீரத்திற் கிலக்கியமாய் வாழ்ந்த மக்கள்
வீழ்ச்சிநிலை பேற்றுவிட்டார்! இனியும் அந்தத்
தீரத்தோ டுயர்வாழ்வு கோள்ளுவாரோ?
சிந்திக்கின், மேன்மேலும் அயர்ச்சியோங்கும்!
ஈரமற்ற வாழ்வுடைய கசாப்புக் காரன்
இடனுள்ள ஆடுகேட்கு மீட்சியுண்டோ?
ஆரியத்திற் கடிமையுற்ற திராவிடர்க்கே
அகன்றிடுமோ துயர்வாழ்வு? யோசிப்பீர்!

16-ம் பக்கத் தொடர்ச்சி

48:- அங்கே உசிரு போயிட்டா என்னப்பா செய்யறது! ஐயோ! பொன்னி!

34:- (ராஜா, கைவிலங்கைக் கழற்றிவிட்டு) டே! நீயுர் ஓடிப்போயி, உன்தம்பி தகனகாரியத்தைக் கவனிச்சிட்டு, ரெடியா இரு, வீட்லே.

ரா:- ஆகட்டுங்க.

34:- என்னு? ஐயோ, பாவமானு இரக்கத்தாலே உன்னை வீட்டுக்கு அனுப்பறேன்—ஏமாத்தினு........?

48:— வாப்பா, ஏமாத்தமாட்டான். நான் எம்மாந் துடியாத் துடிக்கறேன்- ஈவு இரக்கமில்லாமே இப்பத்தான் அந்தப்பயகிட்ட பேசிகிட்டு இருக்கறே.

34:- பாவம்! அவனும் போய்,தம்பி காரியத்தைக் கவனிக்கட்டும்.—வா! வா! பாம்பு கடிச்சா ஒரு பச்சிலே கொடுப்பான். அந்த வில்லி. போயிடும்....................

48:- என்னுப்பா?

34:- விஷம் போயிடும்பா.

(போகின்றனர்)

(ராஜாக்கண்ணு தனிமையில்)

ராஜா:— மனிதர் கைவிட்டனர் —பாம்பு காப்பாற்றுகிறது என்னை!

இரக்கம் காட்டமுடியாது! டாக்டர்— மிராசுதாரன்— சுடலை—34-48—சகலரும் கூறினர்! உலகமேகூறுகிறது— ஒருவர் இருவர் இரக்கம் காட்டவேண்டும் என்று பேசுவர், முடிவதில்லை காட்ட.

பாம்பு கடித்தது என்ற உடனே, பாவம் போய் உன்தம்பியைத்தகனம் செய்துவிட்டுவா! என்று இரக்கம் பேசினுர்கள்!

இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள்.

அதற்குள் முடிவிட வேண்டும்.— ஆமாம்! திருட்டு ரயில்தான்! பிறகு? கப்பல்! கன்காணுச் சீமை!........ என்னைப்போல் எத்தனையோ பேர்! இரக்கத்தைத் தேடி அலைந்து,........ உருமாறினவர்கள்.

✻

## ஆரிய படிப்பினை!

இருநூறு ஆண்டுகளாக, இந்திய பெருநாட்டைப் பாதுகாப்பு எனும் பெயரால், பகை பல மூட்டி, நிலைமைக்கேற்ற நடவடிக்கை சில எடுத்து, ஏகாதிபத்தியப் பாதுகாவலாக அமைந்திருந்த, ஆங்கிலர் படை ஆகஸ்டு 17-ந் தேதி, விடுதலை விழாவில் வேடிக்கை காட்டிவிட்டு வெளியேறப் போகிறது. சில நாளைக்கு முன்வரை இதை எதிர்பார்க்காதது. பிடியை விடாமல், சுதேச மன்னர்களின் அரவணைப்பில் இந்த ஆங்கிலர் படை ஆதிக்கம் பெறும் எனப் பலர் தீர்மானித்ததுண்டு. அனைவருக்கும் ஏமாற்றத்தை அளித்தது, ஏறப்போகிறது கப்பல் ஏகாதிபத்தியப் படை. அவர்களுக்கு அங்கு காத்துக் கொண்டு இருப்பது எது? இங்கிலாந்தின் வரலாற்றில் என்றும் இடம் பெற்றிராத எளிய வாழ்வு. வேதனையைக் கூட்டும் தாழ்ந்த வாழ்க்கைத் தரம். போரின் பயனுக நொருங்கிப்போன இங்கிலாந்தின் பொருளாதாரம் சீர்பெறும் நாள் சீக்கிரத்தில் இல்லை. சரித்திரப் புகழ் பெற்ற சாம்ராஜ்யம், வாழ்ந்த வாழ்வும் போய்—வளமும் வரண்டு — எதிர் காலத்தை எண்ணி எண்ணி ஏங்கிப் பரதவிக்கும் போக்கைப் பெற்றுவிட்டது. கட்டளையிட்டுக் கருத்தை நிறைவேற்றிக் காலங் கழித்த காலம் வெறும் பழங்கதையாகப் போய்விட்டது. சாம்ராஜ்ய கனவு காண்போருக்கு இது ஒரு படிப்பினை.


திராவிடப்பண்ணை புதிய வெளியீடு

**சி. என். அண்ணாதுரை எம். ஏ.,**

எழுதிய

**தேய்ந்துபோன திராவிடத்தின்**

# விடுதலைப்போர்

இதுவரை வெளிவராத இனிதான அரிய வெளியீடு. திராவிடத்தின் விடுதலைக்கான போர்— இந்திய துணைக் கண்டத்து விடுதலைப் போர் எனும் பழங்கதை அல்ல, விலை ரூ. 1—0—0.

தெப்பக்குளம் திருச்சி

குறிப்பு:—

சொற்ப பிரதிகளே அச்சிடுவதால் உங்கள் பிரதிகளுக்கு முன்பே பதிவு செய்துகொள்ளவும். வியாபாரிக்கு 20 சதம்கழிவு தரப்படும்.

தபால் செலவு தனி.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1—4—0 மணியாடர் அனுப்ப வேண்டும்.

**எங்கள் கைவசம் உள்ள புத்தகங்கள்**

1. குமரிக்கோட்டம் 1—0—0
2. வர்ணாஸ்ரமம் 0—12—0
3. ஆகஸ்ட் பதினைந்து 0—4—0

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# இரக்கம் எங்கே?

[இரக்கம் இல்லையா? ஏனய்யா இவ்வளவு கல்மனம்? இரக்கம் கொள்ளாதவனும் மனிதனா? சர்வ சாதாரணமாகக் கேட்கப்படும் கேள்விகள்.

ஆனால், பலரால், பல சமயங்களில் இரக்கத்தைக் கொள்ள முடிவதில்லை.

ஏன்? வாழ்க்கையின் அமைப்பு முறைதான் அதற்கு முக்கியமான காரணம்.

இச்சிறு நாடகம், இக்கருத்தை விளக்குவது.]

காட்சி 1,

இடம்:— வேலன்வீடு.

இருப்போர்:— வேலன், வீராயி, மருதை, பூஜாரி.

[மருதை, படுத்துக்கிடக்கிறான். வேலனும் வீராயியும் பூஜாரிக்கு எதிரில் அடக்கமாக உட்கார்ந்திருக்கிறார்கள். பூஜாரி உடுக்கையை அடித்துக்கொண்டு, உரத்த குரலில் பாடி, வேப்பிலையால், அவ்வப்பொழுது அடித்துக் கொண்டிருக்கிறான். ஒரு தட்டிலே விபூதியும், எலுமிச்சம் பழமும் வைக்கப்பட்டிருக்கிறது. பாதி அளவு சாராயம் உள்ள ஒரு பாட்டில், ஒருபுறம் இருக்கிறது. பூஜாரியின் கண்கள் அடிக்கடி அந்தப்பக்கம் பாய்கிறது.]

பூ:- வேலப்பா! இது பொன்னியம்மா குத்தந்தான், இருந்தாலும் பாதகமில்லே! நான் அதுக்கு சரியான, வேலே செய்துவிடறேன், கொலே நோவு ஓடிப்போவுதுபாரு.

வீ:- (கும்பிட்டபடி) உங்களுக்குக் கோடிபுண்யமுங்க. எங்களாலே இந்தக் கோரத்தைப்பார்த்துச் சகிக்க முடியலேங்க.

பூ:- வீரம்மா! உன்புள்ளே நோவு போயிடுத்துன்னு வைச்சிக்கோ. வேலப்பா! பொன்னியம்மா கோயிலிலே இண்ணராத்திரி நடுசாமத்திலே, ஒரு கோழி அறுத்து, இரத்தத்தை அபிஷேகம் செய்யணும். குடலுக்குக் குடலு.

வீ:- அப்படின்னா, என்னுங்கோ?

பூ:- ஆத்தா, கோவத்திலே, உன் மவனுடைய குலேயிலே நோவு உண்டாக்கிட்டா. இப்போ அவளசு குளிருகிருப்போலே, கோழியை அறுத்துச் குடலே எடுத்து மாலேயா போட்டு விட்டா, ஆத்தா, உன்மவனுடைய குலேநோயை போக்கிடுவா.

வீ:- (கும்பிட்டு, கன்னத்தில் போட்டுக்கொண்டு) பொன்னிம்மா, தாயே! அப்படியே செய்யறேன். ஏழைகமேலே இரக்கம் காட்டு.

(வேலன், துணிமுடிப்பை அவிழ்த்து 3-ரூபாய் கொடுக்கிறான். பூஜாரி அதைப்பெற்றுக்கொண்டு போகிறான்)

காட்சி 2.

இடம்:— பாதை.

இருப்போர்:— பூஜாரி ராஜாக்கண்ணு.

[பூஜாரி, ராஜாக்கண்ணு வருவதைக்கண்டு]

பூ:- அடடே! தம்பி! ராஜாக்கண்ணு இல்லே, நீ! நம்மவேலன் மகன்?

ராஜா:- ஆமாம். நீங்க? தொப்புளான் தோட்டத்திலே காவக்காரராக இருந்திங்களே, மொட்டெ, அவுங்கத்தானே?

பூ:- முன்னே காவக்காரனுக இருந்தேன். இப்பதான் நம்ம பொன்னியம்மா கோயில் பூஜாரி. ஆமா, கடுதாசி போட்டானு, வேலன்?

ராஜா:- இல்லேயே! ஏன்? வீட்டிலே யாருக்கு என்னு?

பூ:- அடபாவமே! உனக்கு விஷயமே தெரியாதா? உன் தம்பிமருதை இருக்கானே, பாவம், அவனுக்குக் குலேநோவு கொல்லுது. பொன்னியம்மா குத்தம். இப்பத்தான், மந்திரிச்சிவிட்டு வர்ரேன். போய்ப்பாரு தம்பியை.

ராஜா:- (சோகத்துடன்) இங்கே இப்படியா? சரி. நான்தான் படாத பாடுபட்டு, பிழைச்சா போதும்னு இங்கே வந்தேன். வந்த இடத்திலே இப்படி இருக்குது. தரித்தி அடிக்குது தொல்லேயும் துயரும்.

பூ:- உனக்கு என்னப்பா உடம்புக்கு? தலேயிலே கட்டு! காயம்!

ராஜா:-அதுவா? ஒண்ணுமில்லே, நம்ம மாட்டுக்குச் சூடுபோட்டுவைக்கிறமில்லே, அந்த மாதிரி நம்ம சர்க்காரு, அடிக்கடி இப்படித் தொழிலாளருக்கு முத்திரை போட்டுவைக்கிறது. அந்த முத்திரை தான் இது.

பூ:- என்னப்பா இது? பட்டணத்துபாஷையிலே சொன்னு எனக்குத் தெரியுமா? புரியரும்போலே சொல்லு.

ரா:- போலீசார், தடியாலே அடிச்சாங்க, மண்டையிலே. அந்த அடி.

பூ:- (திடுக்கிட்டு) என்னப்பா இது? பூமழை பொழிஞ்சுதுன்னு சொல்ருப்போலே, இவ்வளவு சாந்தமாச் சொல்றயே, இந்த அனியாயத்தை. போலீசாரு தடியாலே அடிச்சாங்களா? ஏன்?-

ரா:- என்னே மட்டுமா? என்னேப் போல ஒரு நூறு பேருக்கு இருக்

கும். ஒரு ஐஞ்சாறு பேரு, 'ஒகயா' ஆயிட்டாங்க.

பூ:- என்ன ஆயிட்டாங்க?

ரா:- செத்துப் போயிட்டாங்க.

பூ:- (திகைத்து) செத்துப்போயிட்டாங்களா? அடிச்சதாலேயா?

ரா:- அடின்னா அடி, உங்கவூட்டு அடி, எங்கவூட்டு அடியா அது.

பூ:- அக்ரமமா இருக்கேடா, தம்பி! ஏன் அடிக்கோணும் மனஷன்களை. நாயா, நரியா நாம்ப.

ரா:- (கேலிச்சிரிப்புடன்) அடிக்கிறவங்க மாத்திரம் நாயா, நரியா? அவங்களும் மனுஷ்பனுங்கதான்.

பூ:- மனுஷனை மனுஷன் இப்படி ஈவு இரக்கமில்லாமெ, அடிக்கறதா! சாகடிக்கிறதா? ஏன்?

ரா:- மெட்ராசிலே, நான் மில்லிலே வேலை செய்யறேனேல்லோ, என்னைப்போல ஒரு ஐயாயிரம்பேரு தொழிலாளி வேலை செய்யறானுங்க. விலைவாசி ஏறிப்போச்சி. மில்லிலே கொடுக்கிறகூலி போதலே. மில் காரருக்கு இந்த வருஷத்திலே அடி அடின்னு இலாபம் சரியா அடிச்சுது. எங்க உழைப்பினாலே தானே இவ்வளவு இலாபம் வந்தது, எங்களுக்கோ வயித்துக்குக்கூடச் சரியா இல்லையே, நீங்க கொடுக்கிறகூலி. ஒரு எட்டணா அதிகமாத் தரவேணும்னு கேட்டோம்...........

பூ:- நீயா, கேட்டே?

ரா:- எல்லோரும், ஒருவர்மட்டும் கேட்க முடியாதே. கூட்டம் போட்டுக் கேட்டோம்....

பூ:- தம்பி! பீடி இருந்தா ஒண்ணு குடு.

ரா:- இல்லையே! கூலி உயர்த்தச் சொன்னமா—முடியாதுன்னுசொன்னான்.

பூ:- கெவர்மெண்டா?

ரா:- இல்லே—மில்காரன்.

பூ:- சரி. அப்புறம்?

ரா:- ஸ்ட்ரைக்பண்ணினோம்.

பூ:- என்ன? என்ன பண்ணினீங்க?

ரா:- ஸ்ட்ரைக், ஸ்ட்ரைக் பண்றதுன்னா, வேலைக்குவரமுடியாதுன்னு சொல்றது.

பூ:- வேலை செய்யாவிட்டா, கூலி? கூலிவராமே, குடும்பம் எப்படி நடக்கும்?

ரா:- அதெல்லாம், சங்கம் பார்த்துக் கொள்றேன்னு சொல்லிச்சி. ஸ்ட்ரைக் பண்ணிக் கூட்டம் போட்டோம். ஒரு ஐயாயிரம் ஜனம், ஆத்திரத்தோடு கூடினா, கொஞ்சம் ஆர்ப்பாட்டமாகத்தானே இருக்கும்!

பூ:- ஆமாம் — கொஞ்சம் நிதானம் தவறினாலே, ஆர்ப்பாட்டந்தான்.

ரா:- நாங்க, குடிக்கக் கஞ்சிக்குக் கூட்டம் போட்டோம். அதுக்குப் பேர் என்ன தெரியுமோ. கலாட்டான்னு பேரு.

பூ:- யாரு, உங்க மில்காரன் சொன்னானா?

ரா:- கெவர்மெண்டு சொல்லிச்சி. சொல்லி, போலீசை அனுப்பினாங்க. அவனுங்க குதிரைமேலே வந்தாங்க. நாங்க, கும்பலா கூச்சல்போட்டோம். குதிரை மிரண்டுட்டுது. ஒரே அமர்க்களம். போலீசாரு, தூக்கினாங்க தடியை. மண்டையைப் பார்த்துக் குடுத்தானுங்க........

பூ:- ஈவு இரக்க மில்லாமெ........

ரா:- ஈவாவது, இரக்கமாவது? என்கூட, தங்கவேலுன்னு ஒரு தொழிலாளி—அவன் அண்ணனுக்குப் போலீசிலே வேலை. அண்ணைக் குப்பாரு வேடிக்கையை—கும்பலிலே புகுந்து அடிக்கச்சே, தங்கவேலுக்கு அடி கொடுத்தது யாரு தெரியுமா— அவுங்க அண்ணன்! கும்பலிலே கோவிந்தா! கண்டானா அவன், தன் தம்பின்னு? கண்டு அடிக்காமெ விட்டா, அவனுக்கு வேலைதான் நிலைக்குமா? சாயந்திரம் அண்ணன் அடிச்சான்—அந்த அடிக்கு இராத்திரி, அண்ணி தான் 'பத்து' அரைச்சி போட்டா.

பூ:- ரொம்ப அக்ரமமா இருக்கேடாப்பா? இரக்கம், கொஞ்சம்கூடக் காணோமே?

[ராஜாக்கண்ணு ஒரு பீடி எடுத்துப் பற்றவைக்கிறான்.]

பூ:- என்ன தம்பி, பீடி, குடுன்னு கேட்டா, இல்லைன்னு சொன்னயே?

ரா:- ஆமா, ஒண்ணுதான் இருந்தது. உங்களுக்குக் குடுக்கிறதுக்கு இல்லைன்னு சொன்னேன். சரி, நான் வீட்டுக்குப் போய்ப்பார்க்கிறேன்.

(ராஜா போகிறான்)

பூ:- திருட்டுப்பய! ஒரு பீடி கேட்டா இல்லைன்னு சொன்னான். வேணும் இதுகளுக்கு. இதுகளிடம் ஈவு இரக்கம் காட்டப்படாது.

(போகிறான்)

### காட்சி 3.

இடம்:— வேலன் வீடு.

இருப்போர்:- மருதை, வேலன், வீராயி.

(மருதை படுக்கையில் படுத்துப் புரள்கிறான் — துடிக்கிறான். சாராயப் பாட்டில் முழுவதும் காலியாகிக் கிடக்கிறது. வேலனும் வீராயியும் வேதனைப் படுகிறார்கள்.)

வீ:- ஐயோ! புழுவாட்டம் நெளியிறானே! என் மனம் தாளலியே. நான் என்னத்தைச் செய்வேன். பொன்னியம்பா!

மரு:- ஐயோ! ஐயயோ — என் உயிர்போவுதே— அம்மா—அம்மாடி— அப்பா—அப்பாடி—

(ராஜாக்கண்ணு ஓடி வருகிறான்)

வீ:- அடேராஜா! இந்தக்கண்றாவியைப் பாருடா!

மரு:- அண்ணெண்! வந்துட்டயா? உன்னைத்தான் பார்க்கோணும், பார்க்கணும்னு ஆசையா இருந்தது. ஐயயோ! அப்பப்பா!

ரா:- (பக்கத்திலே உட்கார்ந்து மருதையைத்தூக்கி, மார்மீது, சாத்திக்கொண்டு விம்மியபடி.)

தம்பி! மருதே! உனக்கு என்னடாப்பா, பண்ணுது? ஐயோ! இது என்ன நோயோ தெரியலையே. பார்க்கச் சகிக்கலையே! தெய்வமே! உனக்குக் கருணை இல்லையா?

மரு:- அண்ணெண்! எங்கிட்ட கொஞ்சம் பேசண்ணெண். ஏழைக பேச்சை எண்ணைக்கும் கேட்காத தெய்வத்தைக் கூப்பிட்டு பலன் என்னாண்ணேன்.

ரா:- (தம்பியை அன்புடன் அணைத்துக்கொண்டு) அடெ அப்பா! இந்தக்கோரத்தைப் பார்க்கவாடா, நான் வந்தேன். அப்பா! இங்கே பக்கத்திலெ, டாக்டர் யாரும் இல்லையா?

வீ:- இருக்காரே, ராமய்யர்.

(மருதையைப் படுக்க வைத்துவிட்டு ஓடுகிறான், ராஜாக்கண்ணு— டாக்டர் வீட்டுக்கு.)

### காட்சி 4

இடம்:-டாக்டர் வீடு.

இருப்போர்:-டாக்டர் தண்டம், கம்பவுண்டர், ராஜாக்கண்ணு.

(13-ம் பக்கம் பார்க்க)

# தெளிவுபெற வேண்டாமா?

(நக்கீரன்)

அறிவுக்கு வேலை கொடுத்து, ஆழ்ந்து சிந்தித்து, ஒன்றைப் பற்றிய பொய் மெய்களைக் கண்டறிந்து, அதன்கண் உள்ள பொய்மையைக்களைந்து மெய்மையைக்கடைப்பிடித்துஒழுகுவதற்கேற்ப மக்கட் பண்பென்ற முறையில் செய்யப்படும் பணிக்கு ஆராய்ச்சி என்று பெயர். நடுநிலை திறம்பாது செய்யப்படும் இப்பணியைக் குற்றமென்று கற்றவர்எவரும் கூறமாட்டார்கள். கற்றவர் மட்டுமென்ன? ஆறறிவு படைத்த எவருமே இதனைக் குற்றமென்று கருதிக் கடிந்துரைக்கவோ, காய்ந்து சினக்கவோ மாட்டார்கள்.

ஆனால், ஒரு சிலர் இருக்கிறார்கள், ஒன்றைப் பற்றிச் செய்யப்படும் ஆராய்ச்சியையே, அது, அதனைக் குறித்துச் செய்யப்படும் கண்டனம் என்று கருதும் அளவுக்குத் தங்களுடைய அறிவை 'விரிவு'படுத்திக் கொண்டவர்கள். அத்தகையவர்கள், நம் நாட்டைப்போல் வேறெங்கும் மலிந்து காணப்பட மாட்டார்கள். நம் நாட்டில்தான் ஆராய்ச்சிக்கும் கண்டனத்துக்கும் உள்ள வேறுபாட்டைக் கூடக் கண்டுகொள்ள முடியாத கருத்தழிவு பெற்றோர் பெருகிக் கிடக்கின்றனர். நம் நாட்டில் இத்தகையவர்களே மிகுதியாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. படிக்காதவர்கள்தான் இப்படி உள்ளனர் என்று கருதிவிட வேண்டாம். படித்தவர்களுள்ளும் பலர் இவ்விதமாக உள்ளனர். அதிலும், படித்துப், பிறரைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் பெற்ற ஆசிரியர்கள் பலரின் நிலைமையே, நம் நாட்டைப் பொறுத்தவரையில் இவ்விதமாகத்தான் உள்ளது. இதோ ஒரு எடுத்துக் காட்டு. சிறிது காலத்துக்கு முன்புகூடப், பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களுக்குப், பூமி தட்டை என்றுதான் கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலை இப்போது மாறிவிட்டது; இல்லை; மாற்றப்பட்டு விட்டது. மாறிவிட்டது என்று கூறினால், அந்த மாற்றம், ஒருகால், நம்மாலேயே உணரப்பட்டு, நாமாகவே மாற்றிக் கொண்டோம் என்று பொருள்பட்டுவிடும் என்பதற்காகவே, 'மாறிவிட்டது' என்று கூறாமல், மாற்றப்பட்டு விட்டது—நம்மால் அல்ல—பிறரால் என்று கூறினேன். பூமி தட்டை அல்ல உருண்டை வடிவமாக உள்ளது என்பதை முதலில் கண்டுபிடித்து உலகுக்கு உணர்த்தியவர் ஒரு மேல் நாட்டுப் பேரறிஞராவார். இந்த உண்மை உணர்த்தப்பட்ட நாளில் இருந்தே, பூமி தட்டை என்ற தவறு தவிடு பொடியாக்கப்பட்டு விட்டது. ஆனால்...........இங்கு? 'இங்கு மட்டும் பூமி தட்டை வடிவம் என்றா கற்பிக்கப்படுகிறது' என்று சிலர் பதட்டமாகக் கேட்டுவிடுவர். இங்கும் பூமி உருண்டை வடிவம் என்றுதான் கற்பிக்கப்படுகின்றது. இதை யாரும் இல்லையென்று கூறமுடியாது. ஆனால்...........! 'ஏது மறுபடியும் ஆனால் என்று இழுக்கிறாயே, ஏன்' என்று கேட்கிறீர்களா? 'ஆனால்' என்றசொல்தான், ஒன்றை ஆராய்வதற்குத் தூண்டுகின்றது. எந்த ஒரு பொருளை எடுத்து ஆராய்கின்றோமோ, அந்தப் பொருளைப் பற்றிக் கூறப்பட்டிருப்பவைகளை முன்நிறுத்தி, அப்படியா? அப்படியானால், என்று தொடங்கி, அவைபற்றி ஆராய்வதே மரபு. எனவேதான் 'ஆனால்' என்ற சொல்லை அடிக்கடி பயன் படுத்த வேண்டி நேரிடுகின்றது. எப்படி ஆராய்ச்சிக்கு 'ஆனால்' வேண்டப்படுகிறதோ, அப்படியே, ஆராய்ச்சிகளை அலசிப்பார்க்கும் அன்பர்களுக்கும் "ஆறுவது சினம்" மிக மிக இன்றியமையாது வேண்டப்படுகின்றது. அமைதியை இழந்து ஆராய்ச்சிகளை அலசுவோருக்கு, உண்மை ஒருபோதும் புலப்படாது.

பூமி தட்டை என்பதையும், பகலவனே பூமியைச் சுற்றி வருகின்றதென்பதையும் பொய் என்று உலகுக்கு உணர்த்திப், பூமி உருண்டை வடிவமாக உள்ளதென்றும், பகலவன் தன் நிலை பெயராது ஓரிடத்திலேயே இருக்கின்றதென்றும், பூமியே சுற்றி வருகின்றதென்றும் கூறி, இந்த உண்மையை நிலை நாட்டிய பெருமை மேல் நாட்டுப் பேரறிஞரான கலீலியோவுக்கே உரியது. கலீலியோவால் கண்டு பிடிக்கப்பட்ட இச்சிறந்த உண்மை, கலீலியோ காலத்தில், அவர் கண் எதிரே ஒப்புக்கொள்ளப்பட்டு, அதற்காக அவர் பாராட்டப்படவில்லை. மாறாக, அவர் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுப், பொய்யை மெய்யென்று ஆண்டவன் பேரால் ஆணையிட்டுக் கூறும் அளவுக்கு அவதிப்படுத்தப்பட்டார். என்றாலும், தன் நிலை கலங்காத கலீலியோ, மன்னனின் ஆதரவைப் பெற்ற மத குருமாரின் கொடுமைகளுக்கு அஞ்சி அவர்கள் கூறியபடி ஆணையிட்ட போதிலும், ஆணையிட்டு எழுந்திருக்கும் சமயத்தில் "எப்படியும் இந்தப் பூமி அசைந்தே தீரும்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார். கலீலியோ காலத்துக்குப் பின்னர்தான், அவரால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மை உலக முழுவதுமே ஒப்புக்கொள்ளும் உன்னத நிலையை அடைந்தது. ஆனால், 'மறுபடியும் ஆனலா?' ஆமாம்! இன்று கலீலியோ நாட்டில் அந்த நிலை இல்லை. முற்றிலும் மாறிவிட்டது. ஆராய்ச்சியாளருக்கே அங்கெல்லாம் அதிக மதிப்பும், உயர்வும், ஆதரவும் கொடுக்கப்படுகிறது. ஆனால்........இங்கு? உண்மையை அறியவேண்டுமென்பதற்காக ஒன்றை ஆராய்ச்சி செய்பவனை அதன் கண்டனக்காரன் என்று கடிந்துரைக்கின்றனர். ஆராய்ச்சி என்பது ஆருயிரைக் கொல்லும் கொடிய நஞ்சென்று இங்குள்ளவர் பலர் நினைக்கின்றனர். ஆராய்ச்சி என்பது அறிவுக்கு அரிய அமுதம் என்று அங்குள்ளவர் அனைவரும் நினைக்கின்றனர். ஆராய்ச்சியால் ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்ளலாம் என்று அந்த நாட்டவர் கருதுகின்றனர். ஆராய்ச்சியால் ஐயப்பாடுகள் நீங்கிவிட்டால் என்ன செய்வதென்று இந்நாட்டவர் ஏங்குகின்றனர். கடவுளின் அருளினாலேயே இந்த உலகம் இயங்குகின்றதென்பதை உண்மையாகவே நம்பும் அன்பர்கள்கூடக் கடவுளிடத்தில் தெளிவான நிலையான நம்பிக்கை கொள்வதில்லை. நம்மவருக்குக் கடவுளிடத்திலும் ஐயப்பாடுதான்—காதற்ற ஊசியும் கவைக்கு உதவுமோ உதவாதோ என்பதிலும் ஐயப்பாடுதான். அதனாலேதான் நாம் ஆளுக்கொரு கடவுளை அருமையாக உண்டாக்கி வைத்துக்கொண்டு "உன்னுடைய கடவுள் சிறியவர்; என்னுடைய கடவுள் பெரியவர்" என்று பெருஞ்சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். ஒன்றே குலமும் ஒருவனே கடவுளும் என்பது ஊருக்குரைக்கப்பட்டதேயன்றி நமக்கல்ல என்று நயவஞ்சகம் பேசுகின்றோம். ஆனால், சமயம் வாய்க்

கும்போது சந்தர்ப்ப வாதத்திற்காக அந்த முதுமொழியைத் தம் தலைமீது வைத்து ஆர்ப்பாட்டம்செய்வதிலும் நம்மவர் பின்வாங்குவதில்லை. இத்தகைய மனப்பண்பு நம்மவரிடத்தில் இருப்பதால்தான், இன்னும் நாம் எடுப்பார் .கைப்பிள்ளைகளாகவே இருந்து வருகிறோம். கண்டறிந்த உண்மையைக் கடைசிவரை கடைப்பிடிக்க முடியாதவர்களாகின்றோம்.

பூமி தட்டை அல்ல, உருண்டைதான் என்ற உண்மையைக்கூட நாம் சரிவர உணர்ந்து ஒப்புக்கொண்டதாகக் கூறிவிட முடியாது. பள்ளிக்கூடங்களில் நம் மாணவர்களுககுப் பாடங்கள் கற்பிக்கும் முறையைக் கவனித்தால் இந்த உண்மை நன்கு புலப்பட்டுவிடும். ஒரு வகுப்புக்குப் பூகோளம் கற்பிக்கும் கணக்காயர் (உபாத்தியாயர்) பூகோளம் கற்பிக்கும்போது, பூமி தட்டை அல்லவென்றும், உருண்டை என்றுமே கற்பிக்கிறார். அதே வகுப்பிற்கு இன்னொரு ஆசிரியர் 'சரித்திரம்' கற்பிக்க வருகிறார்; அவர், இரணியாட்சன் என்பவன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்க் கடலுக்குள் மறைத்துவைத்திருந்ததையும்,பின்னர்திருமால்கடலுக்குள் சென்று, பாயாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த பூமியை மீட்டுக்கொண்டு வந்து விரித்து வைத்தார் என்பதையும் 'விளக்கி,' மாணவர் உள்ளத்திலே பூமி உருண்டையல்ல, தட்டைதான் என்று பதியும்படி கற்பிக்கிறார். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஒரு வகுப்புக்குப் பூகோள ஆசிரியராக வருபவரே இன்னொரு வகுப்புக்குச் சரித்திர ஆசிரியராக வருவதும் உண்டு. பூகோள வகுப்பில் பூமியை உருண்டையாக்கியவரே சரித்திர வகுப்பில் பூமியைத் தட்டையாக்குவார் இந்த விநோதம் வேறெந்த நாட்டிலும்-எந்தப்பள்ளிக்கூடத்திலும்—எந்த ஆசிரியராலும் கையாளப்படுவதில்லை. ஆனால்........ நம்முடைய நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்களில், நம்முடைய ஆசிரியர்கள் இந்த முறையை மிகவும் தாராளமாக—முன்பின் எண்ணிப் பார்க்காமல் கையாளுகின்றனர்.

இனி, யாராவது ஒரு விழிப்புற்ற மாணவன், சரித்திர ஆசிரியரை நோக்கி, "ஐயா, பூகோள ஆசிரியர் பூமி உருண்டை வடிவமாக உள்ளது என்று சொல்லிக் கொடுத்தாரே, நீங்கள் கூறுவதைப் பார்த்தால் பூமி தட்டை வடிவமாக உள்ளது என்றல்லவா பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது; இதில் யார் கூறுவது உண்மை" என்று கேட்டுவிட்டால் போதும், உடனே அந்த ஆசிரியருக்கு வந்து விடும் அளவு கடந்த சினம். "ஓ! நீ சு. ம. க்கட்சியைச் சேர்ந்தவனோ?" என்று கேட்டு விடுவார். அப்படிக் கேட்பதோடு மட்டும் அவர் நிற்பதில்லை. சு. ம. க்கட்சியையும் அதில் சேர்ந்துள்ளவர்களையும் வாயில் வந்தபடி வைது தமது ஆத்திரத்தையும் தீர்த்துக்கொள்வார்.

இனிச், சரித்திரம் கற்பிக்கும் ஆசிரியர் சிறிது விழிப்படைந்தவராய் இருந்து, இரணியாட்சன் பூமியைப் பாயாகச் சுருட்டிய கதையைக் கற்பிக்கும்போது, அக்கதையிலுள்ள முரண்பாடுகளை எடுத்து விளக்கி, "இவை இப்படி நடந்திருக்குமா? நடக்க முடியுமா?" என்று அந்தக் கதையை ஆராய்ச்சி முறையில் விளக்கப் புகுந்தாலோ, அந்த ஆசிரியரை சு. ம. க்கட்சியில் சேர்த்து விடுவதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர் பள்ளி மாணவர்களுக்கு நாத்திகம் போதிக்கிறார் என்ற பழியையும் மிக எளிதாகச் சுமத்திவிடுவார்கள். மாணவன் கேட்டது தவறா? ஆசிரியர் கூறிய விளக்கம் குற்றமுடைத்தா? ஒரு சிறிதும் ஆராய்ந்து பார்ப்பதேயில்லை. ஏதாவது ஒரு சிறிது ஐயம் ஏற்பட்டு, அதற்கு விளக்கம் வினவிய உடனேயே, அவனை முட்டாள் என்றும் நாத்திகன் என்றும்நாக்கூசாதுகூறும் இயல்பினரே நம்மை ஆட்டிப்படைப்பவராகவும் அமைந்து விட்டால், நாமும் நாடும் எப்படி முன்னேற்றம் அடைய முடியும்?

இந்தநிலையில் நம்நாட்டிலும் கலீலியோக்களும் சாக்ரட்டிசுகளும் உண்டாகாமல் இருக்கமுடியுமா? ஒரு காலத்தில் நாட்டு மக்களால் வெறுக்கப்பட்ட கலீலியோவும் சாக்ரட்டிசும், இன்று உலக மக்கள் அனைவராலுமே போற்றப்பட்டு, அவர்களுடைய ஆராய்ச்சி உண்மைகள்ஒப்புக்கொள்ளப்பட்டதைக் கண்கூடாகக் காணும் எவரும், உண்மையாகவே ஒன்றினை ஆராய்ந்து அதன்கண் உள்ள பொய் மெய்களைக் கண்டறிய வேண்டுமென்ற பொது நோக்கோடு பணியாற்றுபவர்களைக் கண்டால் காய்ந்து விழும் இயல்பினை மேற்கொள்ளவேமாட்டார்கள். அதிலும், இவ்விருபதாம் நூற்றாண்டை ஆராய்ச்சிக்காலம் என்று, எதிர்காலத்தில் வரலாறு எழுதுவோர் பொறிக்கும் அளவுக்கு, காலப்போக்கு மாறியிருக்கும் நிலைமையை உணரும் எவரும், மக்களுக்குத் தீமை ஏற்படாத முறையில் செய்யப்படும் ஆராய்ச்சி முடிவுகளைக் கண்டு அலறித்துடிக்கவே மாட்டார்கள்.

எனவே தான், நாம் பெரிய புராணம் போன்ற மதநூல்களில் உள்ள முரண்பாடுகளையும் ஐயப்பாடுகளையும் எடுத்துக் காட்டி ஆராய்ச்சி செய்கின்றோம். அவற்றில் காணப்படும், அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தாக் கூற்றுக்களையும், மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தும் பகுதிகளையும், தேவைப்படாத-அவசியப்படாத நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டி 'இவை ஏன்' என்று ஆராய்ச்சி முறையில் கேட்கின்றோம். இதோ பெரிய புராணத்தில் ஒரு நிகழ்ச்சி.

திருவாரூரிலே தண்டியடிகள் என்றொரு நாயனார் இருந்தார். அவர் பிறவிக் குருடர். திருவாரூர்க் கோயிலுக்கு மேற்புறத்தில் இருந்த ஒரு குளம், அளவில் சிறிதாக இருந்தது. குளத்தைச் சுற்றிலும் சமணர்களின் வீடுகளும் மடங்களும் இருந்தன. தண்டியடிகள், அக்குளம் அளவில் சிறிதாய் இருப்பதைக் கண்டார். அதனைப் பெரிதாக்கவேண்டுமென்று நினைத்தார். அவர், திருக்குளத்தினுள்ளே ஒரு தறி நட்டார்; குளக்கரையிலே மற்றொரு தறி நட்டார்; இரண்டுக்கும் இடையே கயிறுகட்டினார்; கயிற்றைத் தடவிக் கொண்டே போவார்; மண்ணை வெட்டிக் கூடையிலேசுமந்துகொண்டுவந்து வெளியே கொட்டுவார். இதனைக்கண்ட சமணர்கள், தண்டியடிகளை நோக்கி, மண்ணை வெட்டாதீர்; உயிர்கள் இறக்கும், அவைகளை வருத்த வேண்டாம் என்று கூறினார்கள். அதற்குத் தண்டியடிகள் சினங்கொண்டு, "நான் ஒரு உண்மையான சிவத்தொண்டனாக இருந்தால் என் சிவத்தொண்டை இழித்துக் கூறிய உங்கள் கண்கள் தெரியாமல் போகவும், என்கண்கள் தெரியவும் பெறுவேன்" என்றார். இதனைக் கேட்ட சிவன், உடனே தண்டியடிகளின் கண்கள் தெரியும்படியும், சமணர்களின் கண்கள் மறையும்

படியும அருள்செய்தார். அக்காட்சியைக்கண்ட அவ்வூர் மன்னன் சமணர்களை ஊரைவிட்டுத் துரத்தினான். தண்டியடிகளுக்குச் சிவனுடைய திருவடிப்பேறு கிடைத்தது. இதுவேஇவ் வரலாற்றின் சுருக்கம்.

இந்நிகழ்ச்சியில் பேசப்படும் தண்டியடிகளாரின் கண்கள் பிறவியிலேயே குருடாக இருந்தன என்று சொல்லப்படுகின்றது. என்ற போதிலும், திருவாரூர்க் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த குளம், சமணர்கள் அங்கு குடியேறியதால், அதன் அளவு சுருங்கி விட்டதைக் கண்டதாகச் சொல்லப்படுகிறது. ஒரு பிறவிக்குருடன், சமணர்கள் குடியேறியதால் குளம் தன் அளவில் குறைந்துவிட்டதென்பதை எப்படிக் காணமுடிந்தது? குளம், கோயிலுக்கு இன்றியமையாத தென்றால், அதனை, வீடுகள் கட்டும் இடமாக அமைக்க அவ்வூர் அரசன் சம்மதித்திருக்க மாட்டானே! குளத்தைவிட, மக்களுக்குக் குடியிருப்பு வசதியே அவசியம் என்பதனாலன்றோ, அரசன் அந்த இடத்தில் வீடுகள் கட்ட இடம் கொடுத்தான்! இதனை ஏன் அந்தக் குருடர் அறியமுடியவில்லை? அவருக்குக் கண்மட்டுமல்ல, கருத்தும் குருடோ?

இனித், தண்டியடிகள் குளம்வெட்டுவதைக் கண்ட சமணர்கள், தங்கள் சமயக்கோட்பாட்டின்படி, உயிர் வதை செய்வதைத் தடுப்பவர்களாதலால், மண்வெட்டும்போது, அதனுள் கிடக்கும் உயிர்கள் வதையநேரிடும் என்பதைக் கூறினார்கள். இதற்காகத் தண்டியடிகள் சினம் கொள்வானேன்? ஏதோ அவர்கள், தங்கள்கொள்கைப்படி, தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறார்கள்; நாம் ஏன் அவருரை கேட்கவேண்டும்; நம்முடைய சமயக்கோட்பாட்டின்படி நாம் நம்முடைய பணியைச் செய்வோம் என்ற அளவோடுதானே நின்றிருக்கவேண்டும்! இதற்காகச் சமணர்களுடைய கண்களை எல்லாம் மறைக்கும் காரியத்தைச் செய்யும்படி சிவனுக்கு ஏன் கட்டளையிட வேண்டும்? அதிலும், பிறவிக்குருடான தம்முடைய கண்கள் தெரியப் பெறவேண்டுமென்றும், கண்ணுள்ளவர்கள் தங்கள் கண்களை இழக்க வேண்டுமென்றும் நினைக்கும் ஒருவனை, அறிவுபடைத்த மக்களினத்தில்தான் சேர்த்தெண்ண முடியுமா?

தண்டியடிகள்தான், தம்முடைய அறியாமையாலும், தாம் சிவனிடத்தில் கொண்டுள்ள பற்றுதல் காரணமாகவும் இந்தக்காரியத்தைச் செய்ய முனைந்தார் என்று கருதி, அதனைப் பற்றி அதிகம் பேசுவது முறையாகாது என்று வாளா இருந்துவிடலாம். ஆனால், எல்லாம்வல்ல— எல்லா உயிர்களையும் படைத்துக்காப்பதாகப்பறை சாற்றப்படும் சிவன், தண்டியடிகளின் பேச்சைக்கேட்டுச், சமணர்களின் கண்களை மறைக்கலாமா? இது முறையா? ஒழுங்கா? இப்படிப்பட்ட கடவுள்தானா நமக்கு வேண்டும்? என்று கேட்டால், கேட்பவர்களுக்கு நாத்திகப்பட்டம்சூட்ட முன்வருகின்றனரேயன்றிச், சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை, ஆர அமர இருந்து எண்ணிப்பார்க்க மறுக்கின்றனரே! இந்தமுறை மாற வேண்டாமா?

இனிச், சமணர்களைக் கண்தெரியாது தவிக்கும்படி செய்ததோடு மட்டும் நின்றுவிடாமல்— அவர்களை அந்த ஊரைவிட்டே துரத்தியடிக்கும்படி அவ்வூர் மன்னனுக்கு ஆணையிட்டதோடுமட்டும் நின்றுவிடாமல் —சமணர்கள் வாழ்ந்த மடங்களையும் வீடுகளையும் இடித்துத்தரைமட்டமாக்கும்படியும் செய்திருக்கிறாரே, அந்தப் பெருந்தகையாம் சிவன். இப்படிப்பட்ட, ஈவிரக்கமற்ற கல்மனம் படைத்த-மதநூல்களில் கூறப்படும் கடவுள் இலக்கணத்திற்கே முற்றிலும் மாறுபட்ட — ஒருவருக்காக, அவருடைய வாய்மொழியையே முடிந்த முடிபாகக்கொண்டு, இன்னொருவரைக் காரணமின்றித் துன்புறுத்தும் இழிதக்கமை படைத்த ஒருவரையா நாம் கடவுள் என்று ஒப்புக்கொண்டு வழிபடவேண்டும்? என்று கேட்பவர்கள் மீது சீறிச் சினந்து விழுபவர்களின் சிந்தை தெளிய வேண்டுமென்பதற்காகவேதான் இத்தகைய ஆராய்ச்சிகளை எழுதி வருகின்றோம்.

✲

## தஞ்சையில் வேலைக்காரியின் விழா

தஞ்சை இராமநாதஞ்செட்டியார் ஹாலில், K. R. இராமசாமியின், ''கிருஷ்ணன்'' நாடகசபையாரால், C. N. அண்ணாதுரை, அவர்கள் தீட்டிய ''வேலைக்காரி'', 150-வது நாடகவிழா 3—8—47, ஞாயிறன்று, எழுத்தாளர் தோழர் வ. ரா. அவர்கள் தலைமையிலும், நகைச்சுவை அரசர், தோழர் N. S. கிருஷ்ணன், அவர்கள், முன்னிலையிலும், நடைபெற்றது.

தோழர் வ. ரா. அவர்கள் ஆற்றிய தலைமையுரை, நாடகம் நல்லமுறையில் எழுதப்பட்டு, நல்லமுறையில், நடிக்கப்பட்டது என்பது உலகறிந்த உண்மை. இதைப்போன்ற நாடகங்கள்தான் நாட்டிற்குத்தேவை சமுதாயத்திலுள்ளபல சிக்கல்களையும், ஏற்றத்தாழ்வுகளையும், விளக்கிக்காட்டப் படுகிறது, இந்நாடகத்தில். சமூக நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, இந்நாடகம் நோய்போக்கும் ஓர் நல்ல மருந்து. இதை இவ்வளவு சிறப்புற எழுதிய தோழர் அண்ணாதுரை அவர்களையும், இந்நாடகத்தை நல்ல முறையில் நடத்திவருகின்ற, K. R. இராமசாமி அவர்களையும், நிர்வாகிகளான T, P. பொன்னுசாமி, P. V. எதிராஜு அவர்களையும், நடிகர்களையும், மனப்பூர்வமாகப் பாராட்டிப்பேசினார்.

### கலைவாணர், தோழர் என். எஸ்! கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய உரை!

நான் சிறை சென்றிருந்தபோது, என் நினைவைப் பொதுமக்களுக்கு ஞாபகமூட்டவே 'இச்சபை' என்பேரால்ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது. கிருஷ்ணநாடக சபை என்றால் அது வேறாகஇருக்கும் கிருஷ்ணன் நாடகசபை என்றிருப்பதால் என்பேரில்தான் இச்சபை உண்டாக்கப்பட்டது. இதுஉண்மை.சந்தேகம்கொண்டவர்கள் சந்தேகத்தைவிட்டு விடுங்கள். இச்சபையை ஆரம்பித்து, பெரும் தொண்டாற்றி வருகிற K. R. இராமசாமியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். என் மனப்பூர்வமான நன்றியையும் அவருக்கு செலுத்துகிறேன். நாடகம் நல்லமுறையில் எழுதப்பட்டு நடந்தது, இதைப் போன்ற நாடகங்களையே இவர்கள் நடத்தி நாட்டிற்குத் தொண்டு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, தோழர் அண்ணாதுரை அவர்கள், எழுத்தாளர் தோழர் வ. ரா. அவர்களையும், கலைவாணர். தோழர் N S. கிருஷ்ணன் அவர்களையும் சபையையும் பாராட்டிப் பேசினார். கடைசியில் சபையின் சார்பில் நன்றி கூறப்பட்டு விழா முடிவுற்றது.

### எவ்வளவு காகிதம்?

இங்கு, நாற்பதுகோடி மக்கள் உள்ளனர். சிறியதீவான நியுஜலந்தில் 15 லட்சம் மக்களே உள்ளனர். அங்கு பத்திரிகைகளுக்கு எவ்வளவு காகிதம் உபயோகப்படுத்தப்படுகிறதோ, அதே அளவு காகிதந்தான் இங்கு, திங்கள், வாரம் தினம் வெளியாகும் வெளியீடுகளுக்குச் செலவாகிறதாம். உலகத்தில் மொத்தம் உற்பத்தியில் 65 சதம் அமெரிக்காவே செலவழிக்கிறதாம். இங்கிலாந்திலும் பிரான்சிலும் தினசரிச்செய்தித்தாள்கள் நான்கு பக்கங்களுடன் வெளிவருகிறது. ஆனால் பெரு, அர்ஜண்டைனா, கனடா முதலிய நாடுகளில் இருபது பக்கங்கள்கொண்டு வெளிவருகிறது.

—

# திராவிட நாடு

காஞ்சி] 17—8—47 [ஞாயிறு

## திருநாள் முடிந்தது

★

திருநாள் முடிந்தது. உலக வரலாற்று ஏட்டிலே, புதியதோர் பக்கம் இணைத்தாயிற்று. இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துவந்த வெள்ளை அரசு விலகிற்று—சுதந்திர விழா கொண்டாடியாயிற்று. இந்திய யூனியன்—பாகிஸ்தான் — இரு அரசுகளும், இனி விடுதலை பெற்ற உணர்ச்சியை முதலாகக்கொண்டு, வாழ்வு வளமாவதற்கான காரியத்தில் ஈடுபடும் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டன.

பிரிட்டிஷாரின் சென்றநாள் நடவடிக்கைகளை நாம் கவனிக்க வேண்டும். 17-வது நூற்றாண்டு இறுதியிலும், 18-வது நூற்றாண்டு முடிவிலும் முறையே நடைபெற்ற, அமெரிக்கச் சுதந்திரப் போரையும், ஆப்ரிக்க உரிமைப் போராட்டத்தையும் அலசிப்பார்க்க வேண்டும். அப்பொழுது தான், இந்தியாவில் ஏகாதிபத்தியம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின், உண்மையான தன்மையை நாம் தெரிந்து கொள்ள முடியும். அப்பொழுது தான், இன்று நாம் பெற்றுள்ள சுதந்திரத்தின்முழு உருவமும், இந்நிலை உண்டாவதற்கான அடிப்படைக் காரணமும், நமக்கு விளக்கமாகப் புலனாகும். இதனை எந்த அளவிற்கு அறிந்து கொள்ளப்படுகிறதோ, அதனைப் பொருத்துத்தான் இருக்கும் ஆளுவோரின் முறையும் போக்கும். எது எப்படியானாலும் மற்றொரு நாட்டார்—சகலதுறைகளிலும் மாறுபட்ட பண்பினர்கள் — மற்றொரு நாட்டினர் மீதுஆதிக்கஞ் செலுத்துவது எந்தவகையிலும் நீதியாகாது. எனவே ஆங்கிலேயர்கள், இந்தியப் பெருநாட்டைவிட்டு விலகுவது கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்று தொலைந்த ஏகாதிபத்தியத்தை இங்கு ஸ்தாபித்த ராபர்ட் கிளைவின் முடிவையும், வைசிராயாக இருந்த வாரன்ஹேஸ்டிங்ஸின் அந்திய காலத்தையும், இன்றுஆட்சி புரிவோரின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறோம். எதிர்காலத்தில் எப்படி நடக்கவேண்டும், எவ்வாறு நடந்தால் மக்களின் அன்பைப் பெறலாம் என்பதை உணர்த்துவதற்கே, அவர்களின் முடிவை எடுத்துக்காட்டினோம்.

இந்நிலையை இங்கு ஏற்படுத்துவதற்கு, உயிரைக் கொடுத்த, உதிரத்தைச் சிந்திய, சிறையில் வதையுற்ற, பொருளைப் பறிகொடுத்த வீரர்களுக்கு நமது மரியாதையையும் வணக்கத்தையும் மனமுவந்து செலுத்துகிறோம். அவர்கள் தியாகம் வீண்போகவில்லை. இவ்வளவு தியாகத்திற்கும், நம்மை நாம் தயாரித்துக்கொள்ளவும், அதற்கான உறுதி பெறவும், நாம் முனைந்தால் அன்றி, நமது 'திராவிட அரசு' உருவாவது முடியாத காரியம். அவரவர்கள் கொண்ட கொள்கைக்காக பற்பலவிதமான கஷ்ட நஷ்டங்களையும் ஏற்கும் பண்பாடு, நமது உள்ளங்களிலும் இடம்பெறவேண்டும், அது நல்ல முறையிலே வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும், இந்த நாள் எடுத்துக்காட்டாக இருப்பதால், இச்சுதந்திர தினத்தை வரவேற்கிறோம்—வாழ்த்துகிறோம்.

பல இனம், பல மொழி, பல கலை, பல கோட்பாடுகள் நிரம்பியுள்ள ஒரு பரந்த நாட்டில் மாறுபட்ட மக்கள் அனைவரையும், ஓர் ஆட்சியின்கீழ் கொண்டுவர முடியாது என்பதை, ஆளுவோர் அறிந்து கொள்வது நல்லது. இந்த மூலக் கருத்தை முன்னரே தெரிந்திருந்தால், இந்தியா அரசியல் சுதந்திரம் அடைவதில் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்காது. வெளியார் குறுக்கீடின்றியே, பாகிஸ்தான் அரசும் என்றோ ஏற்பட்டிருக்கும். பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்ட பிறகாவது, தெளிவேற்பட்டு, முரண்பட்ட பல இனங்களையும் ஒரேபட்டியில் அடைத்து ஆட்சி செய்ய நினைப்பதைக் கைவிட்டு விடவேண்டும். அன்றுதான் இந்த உபகண்டத்தில், அமைதியும் செழுமையும் நிரந்தரமாக நிலைத்து நிற்கும்.

'திராவிட நாடு' கேட்பதிலுள்ள உண்மை இதுவேயாகும். சமாதானமான முறையிலேயே, இதனை ஏற்படுத்துவதற்கான சகல உதவிகளையும் அதிகாரத்திலுள்ளோர் அளிக்க வேண்டும். அதிகாரம் உள்ளது என்ற காரணத்தால், இக்கோரிக்கையை அடக்கவும் அழித்தொழிக்கவும் முனைவதானால், அடக்குமுறையை நட்பாகக்கொண்ட எந்த ஆட்சியும் நிலைப்பதில்லை என்பதை, அவர்களின் சுய சரிதத்தைப் பலமுறை படித்துப் பாடம்பெற வேண்டுகிறோம்.

19வது நூற்றாண்டின் மத்தியில், வியன்னாவில்கூடிய அரசியல் நிபுணர்கள், ஐரோப்பாவிற்கென வகுத்த திட்டத்தைப் பற்றிக் காலஞ்சென்ற H. G. வெல்ஸ் கூறியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது,

"முற்றிலும் வேறுபாடான கலாச்சாரம், வாழ்க்கை வசதி, மொழி இவைகளைக் கொண்ட மக்கள் கூட்டத்தை ஒன்றாக்கி ஆளுவது என்பது முடியாத காரியம். அதுவும் பல்வேறு மதங்களால் ஆதிபத்தியப் படுத்தப் பட்டிருப்பவர்களிடம் நடக்கவே நடக்காது."

இந்த உபகண்டத்தில், ஏகாதிபத்தியம் வெளியேறுவதன் காரணமாக ஏற்பட்டுள்ள இந்திய டொமினியன் அரசையும், பாகிஸ்தான் அரசையும் மற்றுமோர் முறை வாழ்த்தி, திராவிட நாடே நமது லட்சியம் என்பதையும், அதற்காவன செய்வதே இனி நமது பணி என்பதையும், மக்களின் ஒத்துழைப்புப்பெருகவேண்டுமென வேண்டிக்கொண்டு இதனை முடிக்கிறோம்.

★

"போர் வாள்"

திராவிடர் கிழமை இதழ்

ஆசிரியர்கள்:—

காஞ்சி: மணிமொழியார்

மா. இளஞ்செழியன், B. A; (Hon)

ஆண்டுக்கட்டணம். ரூ. 5—0—0

தனி இதழ். ரூ. 0—1—6

விபரங்கட்கு:—

"போர் வாள்" அலுவலகம்,

பவளக்காரத் தெரு,

சென்னை.

# ஏமாற்றம்!

—(ஃ)—

“டொமினியன் சர்க்காரில் இருவர் (தாழ்த்தப்பட்டவர்) களையே நியமித்துள்ளீர்கள். இது, எங்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இதனை அறிய வந்ததும் தென்னாடு முழுதிலும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் காங்கிரஸ் மீது வைத்திருந்த பற்றுதலின் பயனாகக் காங்கிரஸ் நிறுத்தியவர்களுக்கே, வாக்களித்தனர். பாராமை, நெருங்காமை, தொடாமை முதலியவற்றைத் தெற்கில் பார்க்கலாம். கோயில் நுழைவிற்கான ஒரு சட்டம் இயற்றி விட்டதாலேயே, தீண்டாமை தொலைந்துபோய் விட்டதாக நாங்கள் நம்பமாட்டோம். நாங்கள் காங்கிரசிடமிருந்து நீதியையே விரும்புகிறோம். எண்ணிக்கையின்படி, எங்களுக்குரிய நியாயமான பங்காகக் காங்கிரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.”

இப்படியும் பேசுவார் உண்டா? பதவிக்கு இப்படியா பறப்பது? சேவையிலே நாட்டமிருப்பதல்லவா வரவேற்கத் தக்கது! பலன் கருதாமல் பணியாற்றுவதல்லவா தொண்டின் லட்சணம்? உலகத்தின் முன் இந்தியாவின் கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டாமா? இவ்வாறு உத்தியோகத்திற்குமனுப்போட்டால் போட்டியிட்டால் நமக்குள்ளாகவே பிணக்கல்லவா ஏற்படும்? பிறர், இது கண்டு நகைப்பார்களே? ஒற்றுமை காட்டவேண்டிய நேரத்தில், வேற்றுமை தரும் பிரச்னைகளை எழுப்பலாமா? எதிரிகளன்றோ, இதனைச் செய்வர்—என்று இவ்வாறெல்லாம் சீறிக்கேட்பர், சிந்தனையைவேறொன்றின் பால் செலுத்தியிருப்பவர். அவர்களேகூட, அறிவிற்குக் கொஞ்சம் வேலைதந்து, பிரச்னையை ஆராய்ந்து பார்ப்பார்களானால், இதிலுள்ள உண்மையை விளங்கிக் கொள்வர்.

‘தேசியம்’ பேசாதவர்கள் அல்ல இதனைக்கூறினது. தேசியத்திலேயே இரண்டறக் கலந்து, தேசியப் பதிகமே ஓதி, தேசியத்தை இன்று தாங்கிக்கொண்டு, தேசிய மெருகு குலையாமல் இருந்து கொண்டு, தேசியத் திருநாவால் தான், இந்தத் திருமுகத்தையும் டில்லி நோக்கி விடுத்துள்ளனர்.

ஜாதிமதப் பூசல் தரும் சங்கடத்திலிருந்து விலகிக் கொண்டதாகச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள். ஜாதி மதங்களைப் பாரோம் எனும் சமரச கீதத்தைக்—காலந்தவறாமல் சுதிகுறையாமல் பாடிப்பாடி, சமரசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். சமர்ப்பட்டவர்களைப் பரவசப்படுத்தி வந்தவர்கள். வகுப்பு வாதம் ஒற்றுமைக்கு உலைவைத்து விடுமென, தேசியத்தால் அதனை மறைக்கும் பெரும் பணியில் ஆர்வத்தோடு தொண்டாற்றினவர்கள். வகுப்புவாதம் வாழ்வைக் கெடுத்து விடுமென, வார்தாவரை கேட்கும்படி உரத்துப்பேசினவர்கள். இத்தகைய பண்பினருக்கு, இன்று வாட்டம்—வேதனை தோன்றியுள்ளது.

இது நியாயமற்றது— பொருளற்றது—அவசியமற்றது என்று நாம் கூறமாட்டோம். இதனைக்கண்டு திகைப்போ, ஆச்சரியமோ கொள்ள மாட்டோம். அவ்வாறு, மற்றவர் கொள்ளத் தேவையுமில்லை. ஆனால், ஒன்று மட்டும் இங்கு குறிப்பிட வேண்டியது முக்கியமாகும். வகுப்புவாதம் பேசிவந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், தேசியம்பேசி நாக்கைப் பக்குவப்படுத்திக் கொண்டவர்களிடத்திலும், பல காலம் தேசியம் பேசிப் பழகின பின்னரும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்க்கு தேசியம் தகுந்த சிகிச்சை முறையாகாது எனும் முடிவு ஏற்பட்டுள்ளதே என்பதைத்தான் நாம் முக்கியமானதாகக் கொள்கிறோம். இதுவும் ஆரம்ப சிகிச்சையா, நோய்போக்கும் முடிந்த முறையா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும்.

ஆதிக்கக்காரர்களின் பிடியில் சிக்கி, நாயினும் கேடாய் நலிந்து, வாழ்வு வளைந்து, வறுமை பெருகி, வேதனை வளர்ந்து, மடமை மிகுந்து, உள்ளமும் உடலும் நைந்து, உருக்குலைந்து போயிருக்கும் ஒரு சமுதாயத்தினிடம் பேசும் திறம் சிறிது பெற்றுள்ளோர், கல்விகேள்விகளில் சித்தி பெற்றுள்ளோர், ஆதிக்கக்காரர்களை அதட்டிக் கேட்கவும், அதற்கான உரிமைக்குப் போராடவும் முந்துவர். இதன் விளைவாக அவர்களில் சிலபலர் ஏற்றம் அடைவர். அவர்கள், தங்கள் வாழ்விலே வளமிருக்கக் காணுவர். துவக்கத்தில் தாங்கள் எதற்காக, எவர் பொருட்டுப் போரிடத் துணிந்தனரோ, அதனைப் பின்னர் மறப்பினும் மறப்பர். சமூகமுன்னேற்றம் எனும் ஆரம்பப் பேச்சு, அவர்களின் சொந்த நலம் எனும் முடிவை அடையும். இது இயல்பேயாகும். இது அவர்களுடைய குற்றமன்று. சூழ்நிலை, அவர்களுக்கு அப்பண்பை உண்டாக்கி விடுகிறது. அனைவருமே இக்குற்றத்திற்கு உட்பட்டு விடுவர் என்று நாம் கூறவில்லை. சிலரே தப்பிப்பிழைப்பர். அவர்களே கொண்ட லட்சியத்திலிருந்து மாறாது, அதனை நிறைவேற்றும் பணியிலேயே நாட்டஞ் செலுத்தி, ஏற்படும் இடர்ப்பாடு அனைத்தையும் சமாளித்து, முடிவில் வெற்றியும் காண்பர். அவர்தொகை, சிறிதாகவே இருக்கும்.

முடிவில் ஏற்படும் இக்குறைபாட்டை, முதலிலேயே தீர்மானித்துக் கொண்டு, ஒன்று திரட்டப்படும் உரிமை வேட்கையை, ஆதிக்கக்காரர்களின் அட்டகாசத்தை அழிக்கக் கிளம்பும் விடுதலைச் சூறாவளியை, வகுப்புவாதம் எனும் பெயர் சூட்டித் தகர்க்கப்பார்ப்பது அறிவுடைமையாகாது. உரிமையை உணர்த்தும் சக்தி, அதில் நிரம்பியுள்ளதால், அதனை அடக்கவும் முடிவதில்லை. அடக்க அடக்க, அது பலம் பெறுகிறது. அடக்குவதற்காகக் கொள்ளப்படும் சாதனங்களிலும், வாயுரைகளிலும் அவநம்பிக்கை பிறக்கிறது. இதுவே உண்மையாகும். இதனையே தான் மேல் குறித்துள்ள, திருமுகம் மெய்ப்பிக்கிறது. வகுப்புவாதம் கூடாது என்று பேசினவர்களும், அவ்வாறு பேசி வந்தவர்களைத் தூற்றினவர்களும், அதன் விளைவாகவே பலர் தெரியும் அளவிற்குப் புகழ் பெற்றவர்களுமான, தோழர்கள் சிவசண்முகமும், V. I. முனிசாமிப் பிள்ளையும், மற்றவர்களும், இன்று வகுப்புவாதம் பேசப் புறப்பட்டுள்ளனர். மற்றவர்கள் விட்டுவிட்ட ஜாதிய வாதத்தை—உரிமைப்போரின் முதல் கட்டத்தை அடைந்துள்ளனர். தேசியப் பேச்சு, அவர்களுக்கு எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. கொடுமை அப்படியே இருக்கிறது. எனவே ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். அதனால் திருமுகம் தீட்டுகிறார்கள்.

அவர்கள் அனுப்பிய முடங்கலில் இரண்டு விஷயம் இடம்பெற்றிருக்கிறது. ஒன்று இனத்தைப் பற்றினது. மற்றொன்று பிரதேசத்தை—நாட்டைப் பற்றினது. இவை நமக்கு உடன்பாடான—உயிரான கொள்கைகளாகும்.

மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் பதவிவேண்டுகிறார்கள். அதற்கு ஆரணுகத் தாங்கள் பிறந்த தென்னாட்டையும் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த இரண்டு அடிப்படை லட்சியங்களை, எதன் பெயர் கூறியும் தகைத்துவிட முடியாது என்பதே, இதில் பெறப்படும் உண்மையாகும். விளக்கமாகத் தெரியவில்லையே யன்றி, அதில் மறைந்துள்ள பொருள் இதுதான். இதனை, அவர்கள் இதுசமயம் ஏற்காமலிருப்பர் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும் காலப்போக்கில் அவர்கள்கிளர்ச்சி, இந்த முகத்தையே பெறும்.

டொமினியன் சர்க்காரில் வடநாட்டார் இருவர் இடம் பெற்றிருப்பது தென்னாட்டில் அதிர்ச்சியை உண்டாக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். திராவிடத் தனி அரசு ஏற்பட வேண்டுமென்பதன் மூலநோக்கம் இதுவேயாகும்.

வடநாட்டார் பதவியில் அமருவது தென்னாட்டில் அதிர்ச்சியை ஏன் உண்டாக்க வேண்டும்? தென்னாட்டு மக்களின் நலன்கள், வடநாட்டவர்க்குப் புரியாது, புரிந்தாலும் கடனாற்ற மாட்டார்கள் என்பதுதானே காரணம். தென்னாடும் வடநாடும் வெவ்வேறு என்பது தானே இதில் மறைந்திருக்கும் உண்மை. இதனைக்குறிப்பிடுபவர்கள் திராவிடர் கழகத்தினர் அன்றுஎன்பதை நாம்கவனத்தில் கொள்ள வேண்டும். காங்கிரசில் கலந்து பணிபல புரிந்தவர்கள்—புரிந்து கொண்டிருக்கிறவர்கள். இக்கோரிக்கைகளை நாம் வெளியிடுகின்றபொழுது, சந்தேகத்தோடும், சஞ்சலத்தோடும் நம்மைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறவர்கள், இதனைப் பொறுமையோடு சிந்திக்கவேண்டுகிறோம். நிற்க,

ஆதித்திராவிட மக்களின் உரிமைப் போர் ஆலய பிரவேசம் என்றுநாம் அன்று கூறினோம். அதன் காரணமாகவே, அரசியலார் இயற்றிய சட்டத்தை வரவேற்றோம். எதிர்த்த வைதீகத்தைச் சாடினோம். ஆனால், அதே நேரத்தில் ஆலயப் பிரவேசத்தால் மட்டும் பழங்குடிமக்களின் குறைபாடுகள் நீங்கிவிடாது என்று அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டினோம். எதற்கெடுத்தாலும் குறை கூறும் குறைமதி கொண்டோர் எனச் சிலர், நமது போக்கைத் தவறானதாகத்தீர்மானித்துக் கொண்டு, நம்மீது தங்கள் கோபப்பார்வையைச் செலுத்தினர். சினம் கொண்டோமில்லை. பதிலாகப் பச்சாதாபமே காட்டினோம் அவர் பால்.

எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆலயங்கள் திறக்கப்பட்டனவோ, அதே மக்களின் தலைவர்களிடமிருந்து, ஆலயப் பிரவேசம் குறைகளைக் களைந்து விடாது எனும் கோட்பாடு குமுறிக் கொண்டு கிளம்புகிறது. சாதாரணத் தலைவர்கள் அல்லர் இதனைக்கூறுவது. திருச்செந்தூர் வேலனை வாழ்த்தி, பழனி தண்டபாணியைத் தரிசித்து, தில்லைக் கூத்தனைக் காங்கூப்பித் தொழுது, கச்சியே கம்பனைக் கண்டு களித்து, பெருமந்தூர் பெருமாளைச் சேவித்து, திருவாசகமும் திருப்பாவையும் திருப்புகழும் திருநாவால் பாடிப் பரவசப்பட்டு, அவைதந்த இன்பம் நீங்குவதற்கு முன்பே, ஆலயப் பிரவேசம் அதிக பலனைக் கொடுத்துவிடாது என்று தலைவர் சிவஷண்முகம் அவர்கள் சாற்றுகிறார். எதிர்பார்த்ததே இது. நாம் இதே கருத்தைத் தெரிவித்த பொழுது, விளங்கிக் கொள்ளாமலோ, விளங்கியும் கட்சியின் காரணமாகக் களங்கமான கண்களுடனோ, நம்மை ஏற இறங்கப் பார்த்த தோழர்களுக்கு, தோழர் சிவஷண்முகம் அவர்களின் வாயுரையை வழங்குகிறோம் விளக்கத்திற்காக.

தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகள் ஏராளம். இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல. பலநூற்றாண்டுகளாகவே, பரம்பரை பரம்பரையாக இருந்து, வளர்ந்து வருவது. உலகத்தின் வேறெப் பகுதியிலும் இக்கொடுமை என்றும் இருந்ததில்லை. இருபதாம் நூற்றாண்டிலும் இங்கு இருப்பது நமது கலாசாரத்தின் அவலட்சணமாகும். இதனை ஒழிப்பதில் எவருக்கும் வேறுபாடு கிடையாது. ஆனால் அதற்கான முறைகளிலே கருத்து வேற்றுமை இருக்கிறது. பதவியிலே சிலர் அமர்ந்து விடுவதால், அவர்கள் குறைபாடுகள் நீங்கிவிடும் எனச் சிலர் செப்புகின்றனர். இவ்வாறு கூறுபவர்களின் நல்லெண்ணத்தை நாம் சந்தேகிக்கவில்லை. இவர்கள் சொல்லும் முறையினால் எதிர்ப்பார்த்த பலன் கிடைப்பதில்லை. இது நமது அனுபவம். உதாரணம் ஏராளமாக உள்ளன.

வருந்திக் கேட்காமலே, பெரியதோர் முயற்சி எடுக்காமலே பார்ப்பனரல்லாத தலைவர்களில் முக்கியஸ்தரான காலஞ்சென்ற சர். K. V. ரெட்டி நாயுடுகாரு அவர்கள் சென்னை கவர்னராக ஆக்கப்பட்டார். அவர் கௌரவிக்கப்பட்டார். 'எங்களிலே கவர்னர் வேலை பார்க்கத் தகுதியுடையவர் உள்ளனர். எனப் பெருமிதமாகக் கூறிக்கொண்டனர் பார்ப்பனரல்லாதார். அதனால் பார்ப்பனரல்லாதாரின் கல்வி வளர்ந்து விட்டதா? வாழ்க்கை செம்மை பெற்று விட்டதா? வறுமை நீங்கிவிட்டதா? பார்ப்பனரல்லாதார் சமுதாயத்திற்குக் காதொடிந்த ஊசியளவும் நன்மை ஏற்பட்டு விடவில்லையே! மற்றொரு கவர்னராக நியமிக்கப்பெற்ற சர். உஸ்மான் அவர்கள் நியமனத்தால் மட்டும் முஸ்லிம் சமுதாயத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன? பெருமையாகப் பேசிக்கொண்டது தவிர, உருப்படியாக ஏற்பட்ட பலன் என்ன? ஜனாப் ஜின்னா அவர்கள் கூறினதுபோல், 'பீடித் தொழிலாளராகவும், தோல் தொழிலாளராகவும்' அன்றோ இருந்து வருகின்றனர்? ஏற்பட்டுள்ள நோய்க்கு ஏற்ற மருந்தல்லவே இது. இதுவும், இதுபோன்ற மருத்துவ முறையாலும், இருக்கும் பிணி தீரவில்லை என்று அனுபவத்தில் கண்ட பின்பும், அதனையே விடாப் பிடியாகக் கட்டியழுவது முறையாகுமா? நீதியாகுமா? அழகாகுமா? வேறு முறைகளைக் கையாளுவது அல்லவோ ஒழுங்கு?

இன்று பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊருக்குப் புறம்பான ஒதுக்குப் புறங்களிலேயே குடியிருக்கச் செய்யப்பட்டுள்ளனர். உயர் ஜாதி மக்களின், கருணையின் விளைவு. இலங்கும் உடல் உயிர் அனைத்தும் ஈசன் கோயில் எனும் பண்பாடுவோரின் பரந்த கொள்கையின் பலன். இந்நிலை மாறவேண்டும். சேரிகள் அழிக்கப்பட்டு, நகர மக்களுடன் நெருங்கி வாழ்வதற்கு ஏற்பாடுவேண்டும். பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள் உழவர்களாவர். சொந்தத்தில் நிலமற்றவர்கள். பண்ணைக் கூலிகளாகப் பாதி வயிற்றை நிரப்பிக்கொண்டு, உயிர்வைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இக்கொடிய பண்ணை முறை ஒழிக்கப்படவேண்டும். உழவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். இத்துடன் நின்றுவிடுதலும் கூடாது.

உழவர்களின் சக்தி முழுதும் இன்று பயன்படுத்தப்படவில்லை. பெரும்பகுதி பாழாக்கப்படுகிறது. விஞ்ஞானம் தந்த உழவுக் கருவிகளை, அவர்கள் கண்டதே இல்லை. விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யப்படுமானால், அவர்கள் உழைப்புக் குறையும்; உற்பத்தி பெருகும். இது மட்டுமல்ல. நடு ஜாமத்திற்கு வயலுக்குச் சென்று, அஸ்தமித்தபின் கூரையற்ற மண் குடிசைக்குத் திரும்பும் அவலவாழ்வு அழியும். அவர்கள் வாழ்க்கையில் ஓய்வும் கிடைக்கும். ஓய்வே, மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் அவசியம் வேண்டப்படுவதாகும். மற்ற நாட்டு மக்களின் போக்கை உணரவும், நன்மை தீமைகளை ஆராய்ந்தறியவும், வாழ்க்கை வாழ்வதற்கே எனும் பண்பாடு பெருகவும், உண்மையான நாகரிகம் பெறவும் வழி பிறக்கும். இதுவே, அவர்களுக்கு மட்டுமல்ல; அனைவருக்கும் விமோசனத்திற்கான மார்க்கமாகும். ஜாதி, சமயம், மதம் எனப் பேசுவது அனைத்தும், நம்மைப் பிளவுபடுத்துவதற்காக சூதுமதியினர் சிலர் தங்கள் சுகபோகத்திற்காகப் —பாடுபடாமல் பலன் அனுபவிப்பதற்காக—ஏற்படுத்திக்கொண்ட போலிச் சித்தாந்தங்களாகும். வெளிப்படையில் ஏதோ பெரிய மாறுபாடு இருப்பதாகத் தோன்றின போதிலும், சிலரின் ஆதிக்கம் என்றும் நிலைத்திருக்கவேசாமர்த்தியமாக, ஆண்டவன் பெயர் கூறியும், அவதாரங்கள் பெயர் சொல்லியும், பிறப்பின் காரணங் காட்டியும், பிளவை ஏற்படுத்திப் பாதுகாத்துவருகின்றனர். இதனைச் செய்பவர் சில எத்துக்காரர்கள் என்பதை நாம் உணரவேண்டும்.

(12-ம் பக்கம் பார்க்க)

# ராம்பூர் போதனை

மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அவர்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, தேவையைப் பூர்த்தி செய்யாது — தான்தோன்றித் தனமாகக் கோலோச்சுவது, முடிதரித்த மன்னர்களாலும், மக்கள் தொடர்புடையவர்கள் என்று சொல்லப்படும் தலைவர்களாலும் பல காலத்திற்கு நடவாது. மக்கள் விழிப்படைந்து விடுவார்களானால்-விரும்பியதைப் பெற வேண்டுமெனும் உறுதி கொள்வார்களானால்—கொடுங்கோல் முறியடிக்கப்பட்டு, நல்லதோர் ஆட்சி முறையை வகுத்துக் கொள்வர். இது வரலாறு போதிக்கும் உண்மை.

மக்கள் சக்தியை உணராது— உணர்ந்தும் ஆசைக்கு அடிமைப்பட்டு, ஓநாய் போக்கிலே ஊராண்டால்-முடிவில் ஆட்சி முறை அதோகதியாகும் என்பது மட்டுமல்ல-அவ்வாறு ஆளப்படும் சிறிய கால அளவிலும் ஆளுவோர் உள்ளத்தில் சஞ்சலமும் சங்கடமும், பீதியும் பயமும் குடிகொண்டிருக்கும். எதேச்சாதிகார அரசுகள் எத்தனையோ இதுவரை அழிக்கப்பட்டும், மக்கள் ஆட்சி நிறுவப்பட்டும் வந்துள்ளதைக் கண்டும் கேட்டும் இருக்கிறோம்.

வெள்ளையர் இங்கு வியாபாரிகளாக வந்தபோது, இங்கிருந்த வீணர்கள் பலரைத் தங்கள் விருப்பத்திற்கு ஒத்தூதுகிறார்கள் எனும் காரணத்திற்காக, அவர்களுக்கு முடிபுனைந்து அரசர்களெனப் பட்டஞ்சூட்டி, அன்னவர்களின் கோணல் போக்கிற்கு ஆக்கங் காட்டினர். அவரவர் நாட்டில் எழுந்த மக்களின் எழுச்சியை, அவர்களால் அடக்கத் திறனற்றுப் போன வேளையில், பரங்கியர் படை பக்க பலமாக நின்று, ஒழித்துக் கட்டி, உல்லாசச் சீமான்களின் ஓய்யார வாழ்வுக்கு ஊக்கமளித்தது. வெள்ளையர் வெளியேறும் கட்டம் முடிந்து விட்டது. நாட்டு மக்களின் நல் ஆசியைப் பெற்ற 'இந்தியர்'களால் ஆளப்படும் இரு சுதந்திர அரசுகள் ஏற்பட்டு விட்டன. இனியாவது, மேற்குறித்த மன்னர்கள் முறுக்குத் தளர்ந்து, மக்களின் மனம் மலர்ச்சியுறும் என்று பலர் நம்பினர். அதற்குப் போதிய ஆதாரங்களும் உள்ளன. ஆனால் நாம் மட்டும், இதனைக் கொஞ்சம் சந்தேகத்துடனேயே நோக்கினோம். இதனை மெய்ப்பிக்கத் திருவாங்கூர் சுதந்திரப் பிரகடனம் செய்ததை வரவேற்றோம். அதே நேரத்தில், அங்குள்ள மக்களின் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி நேர்மையானது — அவசியமானது என வாதித்தோம். திவானுக்கு வக்காலத்து வாங்குகிறோம் என நம்மீது பழி சுமத்தினர். 6-7-47-ல் நாம் எழுதினது,

> "திருவாங்கூர் மக்களாட்சிக்காகப் போரிடுகையில, இப்போது, திருவாங்கூர் மன்னரின் படை பலமும் அதிகாரமும் மட்டுந்தான், மக்களைத் தாக்கும்—மிச்ச இந்தியாவுடன் திருவாங்கூர் தொடர்பு வைத்தால, அந்தச் சமயத்தில், மன்னருக்குப் பக்கபலமாக, மத்யசர்க்கார் படைபலமும் கிளம்பும். "நான் மிச்ச இந்தியாவிலே ஒரு அங்கமாக இருக்கிறேன். என் ஆட்சியைத் தொலைக்க இங்கே ஒரு கும்பல் கிளம்புகிறது. இதை அடக்கப் படைவேண்டும், உதவிவேண்டும்" என்று திருவாங்கூர் கேட்குமானால், மத்யசர்க்கார், குழப்பத்தையும் கலகத்தையும் அடக்கி அராஜகத்தை ஒழித்து அமைதியை நிலை நாட்டுவதற்காகப் படைகளை அனுப்பித்தான் தீரும். ஆக, வலியச்சென்று வம்பை விலைக்கு வாங்குவதாக முடியும், அந்த இணைப்பு.
>
> மன்னர்களாட்சியை ஒழித்து விடுவது எங்கள் நோக்கமல்ல — என்று பன்முறை காங்கிரஸ் கூறி விட்டது. மக்களுக்கு ஆட்சியிலே பங்கு தரவேண்டும் என்று இதோபதேசம் செய்கிறதே யொழிய, மன்னர்கள் ஆள்வது என்ற முறையே கூடாது என்று காங்கிரஸ் கூறவில்லை. இது, மன்னர்களுக்குக் காங்கிரஸ் தந்துள்ள உறுதிமொழி! இந்நிலையில், சமஸ்தானாதிபதிகள், காங்கிரசின் தயவைப்பெற்றுவிட்டால், பிறகு, சுலபத்திலே மக்கள் கிளர்ச்சியை அடக்கிவிட முடியும்.
>
> ஆகவே தான் நாம் திருவாங்கூர் தனிநாடு என்று நிலைமை ஏற்படுவதையே, அந்நாட்டில் மக்களாட்சி ஏற்படச் சாதகமாக இருக்கும் என்று கூறுகிறோம்.

இதனை வலியுறுத்த, "பவல்பூர் முதலிய சமஸ்தானங்களிலே, அடக்கு முறை தாண்டவமாடுவதை 'பீபிள்ஸ் ஏஜ்' எடுத்துக் காட்டிவிட்டு, சமஸ்தானாதிபதிகள், அரசியல் நிர்ணய சபையில் இடம் பிடித்துக் கொண்டதால், தங்களைக் கேட்பார் இல்லை என்ற துணிவுடன் அடக்குமுறையில் மும்முரமாக ஈடுபடுகிறார்கள் என்று கூறுகிறது" என்பதையும் மேற்கோளாகக் காட்டினோம்.

நமது போக்கை உறுதிப்படுத்தும் மற்றோர் சம்பவமும் சில நாளைக்கு முன் நிகழ்ந்திருக்கிறது. அதனையும் இங்கு குறிப்பிடுகிறோம், சந்தேகத் தோழர்களுக்குத் தெளிவு ஏற்பட.

ஐக்கிய மாகாணத்தை ஒட்டியுள்ள ராம்பூர் ஒரு முஸ்லிம் சமஸ்தானமாகும். மக்களின் விருப்பத்தைக் கண்டறியாமலே, என்றும்போல் சர்வாதிகாரத்தனமாக, நவாப் தம்மிச்சைப்படி இந்திய யூனியன் அரசில் சேர்ந்துவிட்டார். அங்குள்ள குடிகளுக்கு இது பிடிக்கவில்லை. பாகிஸ்தான் அரசில் சேரவேண்டுமென்பது அவர்கள் விருப்பம். ராம்பூர் சமஸ்தானம் இந்திய யூனியனில் சேர்ந்த ஜூன் முதல் வாரத்திலிருந்தே அங்குள்ள முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். சமஸ்தானாதிபதியின் போக்கிற்கு, அங்குள்ள பிரதமரே காரணமென, அவர் பதவியை விட்டு விலகவேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். அரசர், அடக்குமுறையை வீசி எறிந்தார், எழுச்சியை அடக்க. அவரால் அளிக்கக்கூடியது அதுஒன்றுதானே! எரிமலையாக மாறிற்று, மக்களின் அமைதியான நடவடிக்கை. ஊர்வலத்திற்குத் தடை — கூட்டத்திற்குக் கட்டுப்பாடு — தடியடி—துப்பாக்கிப் பிரயோகம் — இவ்வளவும் அமைதியைக் காப்பதின் பேரால், மக்கள் எண்ணத்திற்கு இருட்டடிக்கப்பட்டன.

போர்முறை மாறிற்று. உயர்நீதி மன்றத்துக்குத் தீயிடப்பட்டது. தஸ்தாவேஜுகள் கொளுத்தப்பட்டன. தந்திக் கம்பிகள் துண்டாடப்பட்டன. போலீஸ்-ராணுவ முகாம்களைத் தாக்க மக்கள் முனைந்தனர். நிலைமை நெருக்கடியாயிற்று. மன்னரின் படைபலம், உள்நாட்டுக் கிளர்ச்சியை அடக்கப் போதவில்லை. எப்போதும்போல், நேரு சர்க்காருக்குத் தாக்கீது போயிற்று. [illegible]

மந்திரியான பட்டேலுக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. அண்டையில் பேர்லியில் முகாம் இட்டிருந்த பட்டாளர், விரைந்தது ராம்பூர் சமஸ்தானத்திற்கு. அமைதி நிறுவப்பட்டது. பலர் காயப்பட்டனர். சிலர் உயிர் துறந்தனர். நவாபின் சர்வாதிகாரமும் நிலை நாட்டப்பட்டது.

இதன் படிப்பினை யாது? வெள்ளையர் ஆட்சியில், எவ்வாறு அவர்களுடைய படை பலம், மக்களுக்கு விரோதமாக, மன்னர்களின் ஆதிக்கத்திற்கு அபயம் அளித்துவந்ததோ அதே போன்றுதான், இந்திய யூனியனில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களுக்கும், மக்களுக்கு மாறாக ஆட்சி நடத்தும் அரசர்களுக்கே, இந்திய யூனியன் இராணுவம் ஆதரவாக இருக்கிறது என்பதேயாகும். நமது ஆரம்ப சந்தேகம் உறுதி செய்யப்பட்டது. இதனை மனதில் கொண்டுதான், திருவாங்கூர் அன்று செய்த சுதந்திரப் பிரகடனத்தை வரவேற்றோம். யூனியன் அரசுகளில் சேராமல் சமஸ்தானங்கள் ஒதுங்கி நின்று சுயேச்சையாக இருக்குமானால், மக்கள் உரிமைப்போர் துவக்குவதற்கும், அதில் உடனடியாக வெற்றி காண்பதற்கும் சாத்தியமாகுமென நாம் மனமார நம்பினோம். இன்றும் நம்புகிறோம்.

காங்கிரஸ் தலைவர்கள் பலரும், ஆட்சியில் அமருவதற்கு முன்னர், சமஸ்தானாதிபதிகளைப் பற்றி என்ன கொள்கை கொண்டிருந்தனர் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். சமஸ்தான மக்களின் உரிமைப் போருக்கு வித்திட்டும், ஏற்பட்ட போர்களுக்கு ஆதரவு காட்டியும் வந்துள்ளதை காங்கிரஸ் வரலாறு எடுத்துக்கூறும். சமஸ்தான மக்களின் நலன்களைக் காப்பாற்றவே, அகில இந்திய சமஸ்தான மக்கள் காங்கிரஸ் எனும் பெயரிய ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும், அதற்கு ஜவர்லால் பண்டிதர் தலைவராக இருந்ததும், இன்றும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதும், இதுவரை இந்திய யூனியனில் சேராமல் ஒதுங்கியுள்ள சமஸ்தானங்களில், அவைகள் யூனியனில் சேருவதற்குக் கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதும் தினசரி நாம் காணும் நிகழ்ச்சிகளாகும். காந்தியார் அவர்கள் காஷ்மீர் சென்று இருந்த காலை வழக்கமான பிரார்த்தனைக் கூட்டத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"எது எப்படியானாலும், காஷ்மீரையும் ஜம்முவையும் பொறுத்த வரையில் அங்குள்ள மக்களின் விருப்பமே உயர்ந்த சட்டமாகும் என்பதைக் கூற நான் தயங்கமாட்டேன்' என்றும், "காஷ்மீர், ஜம்முவின் தலையெழுத்தை நிர்ணயிக்க வேண்டியது, அங்குள்ள காஷ்மீரிகளின் பொறுப்பாகும்" என்றும் பேசியுள்ளார். சகல பொறுப்பும் மக்களுடையதே என்று காந்தியார் கூறுகிறார். ஆனால் செயலில் நாம் காண்பதென்ன? மக்கள் நோக்கத்திற்கு மாறாக, மன்னர்களுக்குச் சலுகை காட்டி, உரிமைப் போரை ஒழிக்க, இந்திய இராணுவம், முன்னாள் வெள்ளையர் பணியைத் திறம்படச் செய்கிறதைக் காண்கிறோம்.

இந்திய யூனியன் அரசில், சமஸ்தானாதிபதிகள் சேருவதற்கான சில நிபந்தனைகள், அரசியல் ஆக்கக் குழுவால் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதில், சமஸ்தானக் குடிகளின் ஆளும் உரிமை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இலைமறை காயாகக் கூட குறிப்பிடப்படவில்லை. எதேச்சாதிகார மன்னர்களின் ஆதிபத்திய உரிமைக்கே பல்லாண்டு கூறப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனையின், 8—9 பிரிவுகள், மன்னர்களுக்கே ஆளும் அதிகாரம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. 'பார் உள்ளளவும், கடல்நீர் உள்ளளவும்' பாரம்பரியமாக ஆளும் அதிகாரத்தை இன்றுள்ள குட்டி அரசுகளின் வாரிசுகளுக்கே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்குக் கட்டுப்பட்டு மன்னர்கள் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஜாடையாகவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக, இன்றுள்ள அடக்குமுறைச் சட்டங்களுக்கும், தவறான திட்டங்களுக்கும் பல்லாண்டு கூறப்பட்டிருக்கிறது. என்னே கொடுமை? தலைவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் இவ்வளவு முரண்பாடுகள் ஏன் இருக்கின்றன என்பது சிந்தித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய ஒன்றாகும்.

சுதேச சமஸ்தானங்கள் யூனியனில் சேராமல் இருக்கவேண்டுமென நாம் கூறினது, அங்குள்ள மக்களின் விடுதலைப்போர் உடனடியாக வெற்றி பெற வழி பிறக்குமே எனும் நம்பிக்கையினாலேயேயன்றி, சமஸ்தானாதிபதிகளுக்குள்ள அதிகாரத்தைச் சாஸ்வதமாக்குவதற்கல்ல. இனியாவது, நமது போக்கைத் தவறானதெனக் குறை கூறினவர்கள் உண்மை உணர்வார்களாக.

✲

## 10-ம் பக்கத் தொடர்ச்சி

பிறப்பினாலேயே தாழ்ந்தவர்கள் எனும் கற்பனையை அவர்கள் உதறித் தள்ளினாலன்றி, விடுதலை வேட்கை அவர்கள் உள்ளத்தில் இடம் பெறாது. மேல்நாடுகளில் பண்ணையாட்சி என்றோ தொலைந்து போய்விட்டது. ஆனால் இங்கு மாத்திரம் நிலையாக நிலைத்துப் போயிருக்கிறது. இதற்குப் பெரிதும் காரணம், பிறப்பினாலேயே அவர்கள் தாழ்ந்தவர்களென்றும், பிறருக்கு ஊழியஞ் செய்வதற்கே பிரமனால் படைக்கப்பட்டவர்களென்றும், கட்டப்பட்டுள்ள கதையும், அதனை அவர்கள் பயபக்தியோடு நம்பிக் கொண்டிருப்பதுமே, அவர்களின் அடிமை அகலாமலும், சிலர் சுகஜீவிகளாகச் செல்வத்தில் புரளுவதற்கும் முக்கியமான காரணமாகும். தாழ்த்தப்பட்ட தோழர்களிடமுள்ள இம்மயக்கம் நீங்கவேண்டும். அன்றுதான் பண்ணைமுறை மாற்றம் பெறும். மக்கள் மக்களாக வாழ வழிபிறக்கும். இதற்கான தொண்டு செய்வதே முறையாக இருக்க, பதவிக்கு மனுப் போடுவது, போடுபவர்களின் நல்லெண்ணத்தைக் கறைபடுத்தவில்லையானாலும், ஏற்பட்டுள்ள பிணிக்கு நல்லதோர் மருந்தாகாது. ஏமாற்றம் இருந்துகொண்டுதான் இருக்கும்.

இனப் பிரச்னை அழிக்கப்பட முடியாதது; தென்னாட்டினருக்கும் வடநாட்டினருக்கும் முரண்பட்ட நலன்கள் உண்டு; தென்னாட்டாரின் நம்பிக்கைக்கு வடநாட்டார் பாத்திரமற்றவர்கள்; ஆலயப் பிரவேசத்தால் அதிக பலன் ஏற்படவில்லை; அதற்கான வழி வகை காணவேண்டும் எனும் உண்மைகள் மேலெடுத்துக் காட்டியுள்ள திருமுகத்திலிருந்து வெளியாகின்றன. நமது கருத்துகளுக்கு இரட்டடித்து வரும் 'ஹிந்து' பத்திரிகை, தாழ்த்தப்பட்டோரின் இக்கோரிக்கைக்கு முக்யத்துவம் கொடுத்துள்ளது விந்தையிலும் விந்தையே. சாயம் பூசப்படாததால் சமத்துவம் காட்டினது போலும்'

தோழர்கள் சிவஷண்முகம் பிள்ளை, மந்திரி கூர்மையா, ஆகிய இருவரும், தோழர்கள் ஜவஹர்லால், பட்டேல், டாக்டர் பிரசாத், ராஜகோபால் ஆச்சாரியார் முதலியவர்களுக்கு மேற்கண்டவாறு 6—8—47ல் தந்தியொன்று கொடுத்துள்ளனர். இதனை 'ஹிந்து' தலையங்கப்பக்கத்தில் பிரசுரித்துள்ளது 7—8—47-ல்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

[சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு, டாக்டர் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருக்கிறார். கம்ப வுண்டர் கண்ணன் காலி பாட்டில் களில் கலர்த்தண்ணீர் நிரப்புகிறான்.]

(ஐயா! ஐயா! டாக்டர்! டாக்டர்! என்று வெளியே குரல் கேட்கிறது)

(டாக்டர் பரபரப்படைகிறார். கம்ப வுண்டர் பாட்டில்களை ஒழுங்காக வைத்துவிட்டு வெளியே போய், ராஜாக்கண்ணை அழைத்துக்கொண்டு வருகிறார்.)

க:- இப்பத்தான், டாக்டர் ஒரு விசிட் போய் வந்து உட்கார்ந்தார்- இதற்குள் வந்து விட்டீர்.

ராஜா:—ரொம்ப அவசரமான கேஸ் (டாக்டருக்கு நமஸ்காரம் செய்து விட்டு) ரொம்ப அர்ஜண்டாக என் வீட்டுக்கு வரவேணும்.

டா:-(கம்பவுண்டரைப் பார்த்து) டயம் என்ன இப்போ?

க:-டுவெல்வுக்கு டென் மினிட்ஸ் இருக்கு.

டா:-அப்படின்னா, டோக்கர் கம்பெனி சேட் வருகிற சமயம்?

ரா:—டாக்டர்சார்! என் தம்பி, பிராணவஸ்தையிலே இருக்கிறான். இந்நேரத்திற்குள் என்ன ஆகிவிட்டதோ என்னு பயப்படக்கூடிய ஸ்திதி. தடை சொல்லாமல் வரணும். என் தம்பி உயிரைக் காப்பாத்தணும்.

டா:—(அலுப்பால் வெறுப்படைந்ததுபோல பாவனை செய்து) என்னய்யா இது ஒரே ரகளை! நம்மது வாடிக்கைக்காரன்—ஒரு இலட்சாதிபதி—டோக்கர் கம்பெனி சேட்—அவன் வருகிற நேரம் — அதைக் கெடுத்துக்கொண்டு, உன் பின்னோடு வர முடியுமா?

ரா:—(டாக்டரின் காலைப் பிடித்துக்கொண்டு) அப்படிச் சொல்லப் படாதுங்க. கொஞ்சம் இரக்கம் காட்டுங்க.

டா:—எழுந்திரு, எழுந்திரு. என் வேலையிலே அலுப்பு பார்த்தா முடிகிறதா? சரி! கார் வந்திருக்கா?

ரா:—மோட்டாரா? இல்லிங்க.

டா:—யார்ரா இவன்—சுத்தப்பட்டிக்காட்டுப் பய போலிருக்கு. போய் குதிரைவண்டியாவது கொண்டு வாடா.

ரா:—ரிக்ஷா கொண்டு வரட்டுங்களா?

டா:—சரி. ஓடு. அழைத்துக் கொண்டு வா.

(வெளியே செல்கிறான். டாக்டர் உடை போட்டுக் கொள்கிறார்.)

காட்சி 5.

இடம்:—வேலன் வீடு.

இருப்போர்:—வேலன், வீராயி, மருதை.

[டாக்டர் உள்ளே வருகிறார். வீராயி கும்பிடுகிறாள். வேலன் காலிலே விழுகிறான்.]

டா:—என்னை அழைக்க வந்த ஆசாமி எங்கே?

வே:—டே! அப்பா! ராஜாக் கண்ணு! டே!

(ராஜாக்கண்ணு, ஒரு பழைய நாற்காலியைத் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறான். அதைப்போட்டு, டாக்டரை அதிலே உட்காரச் சொல்லி விட்டு நிற்கிறான்.)

(டாக்டர் பரிசோதனை நடக்கிறது.)

டா:—இது, அபண்டிசிடிஸ். மேஜர் ஆபரேஷன் செய்யணும். ரொம்ப ஜாக்ரதையாத்தான் கவனிச்சிக்க வேணும்.

ரா:—(பயந்து) ஆபரேஷனா? ஆபத்து இராதுங்களே!

டா:—ஏம்பா! நான் என்ன ஜோசியரா? டாக்டர்தானே! அபண்டிசிடிஸ் ஆபரேஷன் சிரமமானதுதான். நூறு ரூபாயாகும், பீஸ்.

ரா:—(மேலும் பயந்து) நூறு ரூபாய்ங்களா? உயிருக்கு ஆபத்து இராதே.

டா:—நூறு ரூபாய்னு அதிகம்னு நினைக்கறயா? வியாதி, அப்படிப்பட்டது. உயிர்விஷயத்தைப் பத்திப்பயப் படாதே, பகவான் இருக்கார்.

ரா:—(வேலனைப் பார்த்து) ஐயா, ஆபரேஷன் செய்கிறாராம், பிறகு ஆண்டவன் இருக்காருன்னு சொல்றாரு.

வே:—(வேதனையுடன்) ரூபா நூறு வேணுமாமே.

(ராஜாக்கண்ணு கைகளைப் பிசைந்து கொள்கிறான். வீராயி முந்தானையால் கண்ணைத் துடைத்துக் கொள்கிறாள்.)

டா:—சரி! உங்கயோசனை முடிந்த பிறகு வந்து சொல்லுங்கோ. இப்ப, விசிட்டிங் பீஸ் ஐஞ்சு ரூபா எடுங்கோ.

ராஜா:—இருங்க, டாக்டர்.

(ராஜா, தகப்பனிடம் இரகசியமாக எதுவோ பேசுகிறான்.)

(மடியிலிருந்து ஒரு மணி பர்சை எடுத்துச் சிலநோட்டுகளை டாக்டரிடம் கொடுத்து)

ரா:—தற்சமயத்துக்கு இதை வைச்சிக்கங்க—ஏழைக மேலே இரக்கம் காட்டுங்க.

டா:—நீ, என்ன காய்கறிக்கடைக்காரனா? இது என்னப்பா, இருபத்தைந்து ரூபா?

ரா:—கையிலே இருந்தது அவ்வளவுதானுங்க. பெரிய மனசு செய்ய வேணும்.

(டாக்டர் ஒரு ஐந்து ரூபா நோட்டை எடுத்துக்கொண்டு, மற்றதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு)

டா:—வேறே ஆசாமியைப் பாரு. இல்லையானா தர்ம ஆஸ்பத்திரிக்குப் போ.

ரா:—ஐயா! இந்த ஆபத்தான நிலைமையிலே, கைவிட்டு விடுவது தர்மமா, நியாயமா? கொஞ்சம் ஈவு இரக்கம் காட்டக்கூடாதா? இந்தப் பையனைக் கொஞ்சம் கண்ணாலே பாருங்க. உயிர் துடிக்குதே! மரணவஸ்தையிலே இருக்கிறானே! பணமா பெரிசு! டாக்டர்! ஒரு பிராணனைக் காப்பாத்துங்க—கொஞ்சம் இரக்கம் காட்டுங்க.

டா:—சுத்தப் பைத்யக்காரத்தனம்! இரக்கம், இரக்கம்னு சொல்லிக்கொண்டா, எனக்குப் படிப்பு சொல்லித் தந்தார்கள்? பணம் கொடுக்க, வக்கு, இல்லாதவன், டாக்டர் வீடு வருவானேன்? வேலை இல்லாமலா இருக்கிறேம், கண்ட இடத்துக்கு வந்து போக! இடியட்!

(கோபமாகப் போய்விடுகிறார். டாக்டர் போனபிறகு)

ராஜா:—அப்பா! இந்தப் பாவிகள் எவருக்கும் இரக்கம் என்பது கடுகளவுகூட இல்லை. ஏழைகளின் துயரத்தைப் பற்றிக் கவலைப்படுகிற ஆளையே காணோம்.

வே:—எந்தப் புண்யவானும் கிடைக்கலையே.

மருதை:— (படுக்கையில் புரண்டபடி)

புண்யவான்களுக்கு என்னப்பா குறைவு? வண்டி வண்டியாக இருக்கிறார்கள். கோயில் கட்டுவாங்க,

குளத்தை வெட்டுவாங்க, தேரு திருவிழா செய்வாங்க, ஏழைக்குக் குலே நோவு வந்தா, அவுங்களுக்கு என்ன, குடும்பமே நாசமானுத்தான் என்ன!

ரா:—தம்பி! நீ பேசிகிட்டு இராதேப்பா. வலி அதிகமாப் போகும்.

மரு:—இருக்கப்போறது கொஞ்ச நேரம், பேசிகிட்டாவது சாகிறேன்.

வீ:—ஐயோ, மகனே! அப்படி எல்லாம் பேசாதேடா கண்ணு!

ரா:—அப்பா! என்னாலே தாங்க முடியாது. இந்த க்ஷணம் போய், நீங்க வேலே செய்ற இடத்திலே எப்படியாவது கொஞ்சம் பணம் கடன் வாங்கிகிட்டு வாங்க...........

வே:—அந்தப் பாவி கிட்டவா போகச் சொல்றே. அவன் ஈவு இரக்கமில்லாதவனுச்சே, எரிஞ்சி விழுவானே.

வீ:—போய், கைகாலேப் பிடிச்சிக்கங்க. இந்த ஆபத்தான வேளேயிலே கூடவா, அவரு, கர்மியா இருப்பாரு போய்வாங்க. எழுந்திருங்க. நான் நல்ல சகுனம் வருதான்னு பார்க்கிறேன்.

(வேலன் போகிறுன்.)

காட்சி 6.

இடம்:— மிராசுதார் மாணிக்கம் மாளிகை.

இருப்போர்: — மிராசுதார்
கணக்கெழுதும் கந்தையா,
கடன்பட்டவர்.

[மிராசுதார் கோபமாக உலவுகிறுர். கடன்தர வேண்டியவர் கைகட்டிக்கொண்டு நிற்கிறுர். கணக்கெழுதுபவர் தலேயைச் சொறிந்து கொண்டு நின்றபடி, கடன் தர வேண்டியவரைக் குறும்பாகப் பார்க்கிறுர்.]

மிரா:—தலே தலேன்னு அடிச்சிகிட்டு, எங்காவது தேசாந்திரம் போகலாம்போலே இருக்கு. மூணு வருஷமாகுது; வாங்கின கடனேப் பைசல் செய்யலே. கேட்டு அனுப்பிஞ லாபாயின்ட் பேசறே லாபாயின்ட்.

கட:—நான் தவருக ஒண்ணும் சொல்லலிங்களே. கணக்கப்பிள்ளே, மென்னியைப் பிடிச்சாரு. அந்தச் சமயம், என் மருமவன், குடித்து விட்டு வந்து என் மகளேப் போட்டு அடிஅடின்னு அடிச்சிப்போட்டான். நான் வேதனேயோடு இருந்தேனுங்க. அந்தச் சமயத்திலே, கடனேப்பைசல் செய்தாகணும்ணு, உயிரை வாங்கனுரு. கோவத்திலே, வாங்கிக்கிற விதமா வாங்கிக்கோன்னு சொன்னேன்.

மிரா:— (ஆத்திரம் பொங்கியவராய்) எவ்வளவு திமிர் இருந்தா அப்படிப் பேசத்தோணும்? கடன்பட்ட கழுதே, அடக்க ஒடுக்கமாப் பதில் பேசாமே, ராங்கிப் பேசறியா ராங்கி. உன்னே, வீடு வாசலே ஏலத்திலே எடுத்து ஊரைவிட்டுத் துரத்தாவிட்டா, என் பேரை மாத்தி வைச்சிக்கிறேண்டா. ஆமா........

கட:—மன்னிச்சிடுங்க........

மிரா:—உன்னேயா? ஊரான் சொத்துக்குப் பேயாப் பறக்கற உன்னேயா? மரியாதையா இந்த இடத்தை விட்டுப் போயிடு........ ஆமா........எனக்கு இருக்கறகோவத்துக்கு, நான் உன்னே........

கண:—(கடன்காரனேப் பார்த்து) போய்வாய்யா! நாளே மறுநாள் வந்து கடனேப் பைசல் செய்துடு. போ! கடனே வாங்கறப்போ, பூமேலே வைத்துக் குடுத்துடறேன், கெடுவு தவறுதுன்னு குழையறது—கொஞ்சம் கண்டிஷனு இருந்தா, சட்டம் பேசறது........போ! போ.

(கடன்பட்ட பூஜாரி போகிறுன்)

(வேலன் வருகிறுன்.)

மிரா:—இவர் எங்கே வந்தாரு தொரெ! இந்த நேரத்திலே?

வே:—(சோகம் கப்பிய குரலில்) எஜமான்! இந்தச் சமயத்திலே நீங்கதான் காப்பாத்தவேணும்.

மிரா:—(கேலியும் கோபமும் கலந்த குரலில்) கற்பூரம் கொண்டு வந்தாயாடா?

வே:—(புரியாமல்) எதுக்குங்க?

மி:—என் எதிரிலே கொளுத்த! ஒருத்தன் மாத்தி ஒருத்தன் நம்மைப் பிராணனே வாங்குகிறவனுகவே வந்து சேருகிறுன். காப்பாத்தவேணுமாம் இவரை! ஏண்டா, உலகம் பூராவையும் காப்பாத்த அவன் இருக்கான்.

வே:—என் சின்னு மகன் சாகக் கிடக்கிறுனுங்க. கொலே நோவு. ரொம்ப ஆபத்தா இருக்குது........

மி:—ஓஹோ! இதைச் சொல்லி விட்டு, நாளேக்கு வேலேக்கு வராம இருக்க........

வே:—எஜமான், லீவு கேக்க வரலிங்க........என் மகன் உயிரைக் காப்பாத்தணும். டாக்டர் ஆபரேஷன் செய்தாத்தான் பையன்பிழைப்பானுன்னு சொல்றுரு. (விழுந்து கும்பிட்டு) இந்தச் சமயம் ஒரு நூறு ரூபா கடனு கொடுங்க, என் பிள்ளேயைக் காப்பாத்துங்க........

மி:—சரி. சரியான 'பிளான்' போட்டுகிட்டுத்தான், வந்துட்டான். ஆபரேஷன் செய்யணுமா! டாக்டர் பீசு 100 ரூபா!! பெரிய சீமானில்லே இவரு. பட்டத்து இளேய ராஜாவுக்கு, இல்லவா, வைத்யம் செய்யப் போறுரு........

வே:—எஜமான், இந்தச் சமயம் என்மனம் நொந்து போயிருக்கிற சமயத்திலே இப்படி எல்லாம் பேசாதிங்க. எப்படியாவது, நீங்கத்தான் காப்பாத்தணும். கொஞ்சம் இரக்கம் காட்டுங்க. நான் நாயா, உழைக்கிற வனுச்சிங்களே, உங்களேத் தவிர உலகத்திலே எனக்கு யாருங்க துணே?—கொஞ்சம் மனசு வையுங்க.

மி:—(கோபத்துடன்) ஏண்டா! நீ என்னுண்ணு எண்ணிக்கிட்டே, பணம் என்ன செடியிலா முளேக்குது. வாய் கூசாமே, ஐஞ்சா, பத்தா? நூறு ரூபா கேக்கறே. முட்டாப் பயலே! போடா. போயி ஏதாச்சும் கஷாயம் போட்டுக் கொடு நோய் போயிடும். ஆபரேஷனும் — நூறு ரூபாயாம்—..........பெரிய சமஸ்தானம்--திருவாங்கூர்.........!

வே:—தெரிந்த வைத்யமெல்லாம் செய்தாச்சிங்க. குணமாகலேங்க. துடியாத் துடிக்கிறுன்.

மி:—ஏண்டா, அந்தப் பய பெரிய அலகிரி! கூச்சல் போடுவான். நோவு இருந்தா கொஞ்சம் பல்லேக் கடிச்சிகிட்டுப் பொறுத்துக்க வேணும். மூணுநாளா எனக்கு முதுகுவலி உயிரை வாட்டுது — அவ வேறே, அடிவயித்திலேஎன்னமோபண்ணுது என்னமோ வேதனேன்னு அழுதுகிட்டு இருக்கா. நோவு நொடி சகசமாக வரும் போகும். அதைச் சாக்குக்காட்டி இங்கே பணம் கிணம்னு வராதே. செப்பாலடிச்ச காசு கிடையாது—ஆமா—போ, போ.

வே:—எஜமான், எஜமான்........

மி:—போடா போ! நான் இனி உனக்குப் புத்தி சொல்லிகிட்டு இருக்க முடியாது—சிவன் கோயில் போயாகணும்—டே முனியா! தடி

யைக் கொண்டா-அம்மா! அன்னம்! சரிகை வேஷ்டியை எடுத்துவாம்மா-போ போ — இங்கே சனியன் போலே என் எதிரே இராதே-அன்னம்! வாம்மா நேரமாவுது — ஏய், கணக்குப்பிள்ளெ. நெத்தியிலே, சந்தனப் பொட்டு சரியா இருக்கா பாரய்யா...........(உரத்த குரலில்) டேய்! தடியா! வண்டியைப் பூட்டியாச்சா?

(அன்னம், வேஷ்டிகொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கிப் பார்த்துவிட்டுக் கோபத்துடன், கீழே வீசி விட்டு)

ஏம்மா! இதான் கிடைச்சுதா உனக்கு? வேறே இல்லே........

காட்சி-7

இடம்:— பாதை

வேலன், சுடலே, ராஜாக்கண்ணு,

(விசாரத்தோடு வேலன் தள்ளாடி நடந்து வருகிறான். அவனுக்குப் பின் புறமிருந்து ஒரு முரடன் ஓடி வந்து, கீழே தள்ளி, வேலனைக் கத்தியால் குத்த முயற்சிக்கிறான். வேலன் கூச்சலிடுகிறான்.)

வே:—சுடலே! சுடலே! உன்னைக் கும்பிடுகிறேன். என்மவன் அங்கே குத்துயிராக இருக்கிறான், என்னே இப்போ ஒண்ணும் செய்யாதே........

சு:—டே, வேலா! போன வெள்ளிக்கிழமை புளியமரத்திலே கட்டி வைச்சி அடித்தவனில்லே நீ. மறுதினமே தயார் பண்ண கத்திடா இது.

வே:- (திணறி) எஜமான் சொன்னரு உன்னை நான் அடிச்சேண்டா சுடலே-எனக்கும் உனக்குமா விரோதம்?

(சுடலே அடிக்கிறான் — வேலன் கத்தியைக்கீழே தட்டிவிடுகிறான்—கூவுகிறான்—அதே சமயம் ராஜாக்கண்ணு ஓடி வருகிறான்)

(சுடலேமீது பாய்ந்து, தாக்குகிறான். சுடலே பலத்த அடிபட்டுக் கீழே வீழ்கிறான்)

வே:- ஐயோ, பாவம்! பலமான அடி விழுந்துடுத்தோ.

(சுடலே அருகே சென்று இரத்தத்தைத் துடைக்கிறான்.) ராஜா! அவன் மேலேதப்பு இல்லெடா. போன வெள்ளிக்கிழமை, அவனே நான் புளியமரத்திலே கட்டிவைச்சி, அடிச்சேன் — இன்னக்கி அவனுக்குச் சமயம் கிடைச்சுது.

ரா:- இவன் என்ன செய்தான்.

வே:- பாவம்! என்னே ஒண்ணும் செய்யலே இவன். என் எஜமான் தோட்டத்திலே வேலே செய்கிறவன். தாறுமாறுப் பேசினனும் எஜமானை. அவர் என்கிட்ட சொல்லி, அடிக்கச்சொன்னர்.

ரா:- ஏழையைக் கொண்டே ஏழையை அடிக்கச்சொன்னனு? சரி, பணம் கிடைத்ததா?

வே:- கிடைக்குமா? நான்தான் முன்னமேயே சொன்னேனே. கெஞ்சிக்கூத்தாடினேன் — ஒருசல்லிகூடத் தரமுடியாதுன்னு சொல்லிவிட்டுப் போயிட்டாரு — ஜமுனு வீட்டுக்கு.

(ராஜாக்கண்ணு ஒரு நிமிஷம் யோசித்துவிட்டு).

ரா:- அப்பா! நீ வீட்டுக்குப்போ! தம்பிக்குக் கொஞ்சம் சாராயம் கொடுத்தேன். தூங்கருன். எனக்கு ஒரு சினேகிதர் இருக்காரு, அவரை யாவது போய்க்கேட்டு ப்பார்க்கிறேன்.

வே:- சுருக்கா வந்துடு.

ரா:- ஆகட்டும்பா! அடிபட்டதுக்கு ஏதாச்சும் 'பத்து' அரைச்சி போடப்பா,

(வேலன் போகிறான். ராஜா,கீழே கிடந்த கத்தியை எடுத்துக்கொண்டு கிளம்புகிறான்.

காட்சி—8

இடம்:— ஜமுனுவீடு —கூடம்

இருப்போர்:-ஜமுனு, மிராசுதார்.

[ஜமுனு,மிராசுதாருக்குப்பானம் தருகிருள். அவர், சரசமாடிக் கொண்டே அதைப்பருகுகிருர். வெளியே குரல் கேட்கிறது. அவள் எழுந்து உள்ளே போய்விடுகிருள்.

மிராசுதார், உள்ளே வா, என்று உத்தரவிடுகிருர். ராஜா, கூடத்துக்கு வருகிறான். மிராசுதார் குடிவெறியில் உளறுகிருர்.]

மி:- யார் நீ? தெரியலேயே!

ரா:- (பானத்தை எடுத்துப்பருகிவிட்டு) தெரியலே!...........நான்தான் ஜமுனுவுக்குத தம்பி!

மி: (குடிவெறியால் ராஜாவைத் தழுவிக்கொண்டு) அடெ, நம்ம மச்சானு! மச்சான்—சும்மா சாப்பிடு.... சாப்பிடு மச்சான்...........எனக்குத் தெரியவே தெரியாதே...........ஜமுனு சொல்லவேயில்லேயே. ஜமுனு! ஜமுனு!! ஜமுனு!!—!

(ஜமுனு வருகிருள்)

ரா:- அக்கா! கொஞ்சம் அத்தானிடம் இரகசியம்பேசணும், உள்ளே போய் இரு.

ஜ:- யார் இவரு? அக்காவுக்கு ஒரு தம்பி வந்து முளைச்சாரு.?

ரா:- (மிரட்டுகிற பாவனையில்) ஜமுனுக்கா! உள்ளே போ!

ஜ:- (கோபத்துடன்) அடயாரடா இவன், அறிவு கெட்டவன் — என் வீட்டிலேவந்து, என்னே உள்ளே போகச்சொல்ல.

மி:- என்னு ஜமுனு இது? அக்காவுக்கும் தம்பிக்கும் சண்டையா?

ஜ: கர்மந்தான்! குடித்துவிட்டு வெறியிலே உளறுதிங்க.

ரா:- உள்ளே போகிறயா, இல்லையா?

ஜ:- அடடே! இவரு பெரியசூரப் புலி!

ரா:- (கோப்பையை வீசி எறிந்து) போடி உள்ளே! போடின்னு போ—(கத்தியைக் காட்டுகிறான் — ஜமுனு உள்ளே ஓடிவிடுகிருள் பயந்து—திகைக்கும் மிராசுதாரன் வாயைக் கட்டிவிட்டு, பணத்தை எடுத்துக் கொண்டு, ராஜா ஓடிவிடுகிறான்.)

காட்சி—9

இடம்:- வேலன் வீடு.

இருப்போர்:-வேலன், வீராயி, மருதை.

[ராஜாக்கண்ணு, வீட்டுக்குள் நுழைகிறான். அழுகுரல் கேட்கிறது. ஐயோ! என்று அலறிக்கொண்டு ஓடுகிறான். தம்பி மருதை இறந்து கிடக்கிறான். வேலனும் வீராயியும் புரண்டு அழுகிருர்கள். ராஜாக்கண்ணு, தம்பிமேல் புரண்டு கதறுகிறான்.

ரா:- தம்பி! கடைசியில் நீசெத்துவிட்டாய்! ஆமாம்! தடி தடியாக நாங்கள் இருந்து என்ன பிரயோசனப்பட்டது — பழிகார உலகமே! ஏழையைப்பார்! குடிக்கவும் கூத்திவீட்டுக்குப்போகவும், ஏழையின் வயிறு எரிய எரியப் பணத்தைப் பிடுங்கும் பணக்காரச்சமுகமே! உன் மனம், கல்லா, இரும்பா? இரக்கம் இல்லாத நெஞ்சு! ஈரமில்லாத நெஞ்சு! உன் வஞ்சகம் எப்போது ஒழியும். (தம்பிமேல் விழுந்து) எப்போதடா தம்பி! இந்த உலகத்திலே, ஏழையின் குலே நோய், எப்போதடா தம்பி தீரும். நமக்கு விடுதலே,விமோசனம், வாழவழி, எப்போதடா தம்பி கிடைக்கும்? உன்னைப்போல, பிணமானபிறகுதானு? ஏழைகளுக்கு இந்த உலகத்திலே இடம் [illegible]

மெல்லாம் என்தகப்பனுரை வேலை வாங்கிய காதகன் கடுகளவுகூட இரக்கம் காட்டவில்லையே! பாழும் பணத்தை (நோட்டுகளைக் கசக்கிக் கீழேவீசியபடி) ஊரை மோசம் செய்து, பலகுடும்பங்களை நாசம் செய்து, சேர்த்தபணத்தை, ஜமுனுவுக்குத்தர மனம் இருந்தது, என் தம்பியின் உயிரைக்காப்பாற்ற மனம் இல்லையே! பணமே!பணமே! பாபிகள் கையில் கொஞ்சிவிளையாடும்பணமே! இதோ என் தம்பியின் பிணம்! நீ இங்கே முன்பு இருந்திருந்தால், என் தம்பி பிழைத்திருப்பான். தூ! இனி என் கால்தூசுக்குச் சமானம் நீ (நோட்டுகளைக் காலால் துவைக்கிருன்.)

(இரண்டு போலீசார் உள்ளே வருகிருர்கள்.)

போ:- யார்டா இங்கே, ராஜாக்கண்ணு!

ரா:- நான்தான்...............

போ:- இதென்ன இங்கே?

ரா:- என் தம்பி.

போ:- செத்து போயிட்டானு? பாவம்: கர்மம்! சரி, நீதானே ஜமுனு வீட்டிலே புகுந்து கலாட்டாசெய்து மிராசுதார் பொருளைத் திருடிக்கிட்டு ஓடிவந்தது?

ரா:- ஆமாம்.

போ: எவ்வளவு நெஞ்சழுத்தம்! பயல், பட்ணமோ, பிடித்துத் தள்ளிகிட்டுவா...................

வீ:- (அவர்கள் காலைத் தொட்டு) ஐயா! தருமப் பிரபுக்களே! இங்கே பிணம் கீழே கிடக்குதே—அவன் தம்பிங்க.......தகனம் செய்தூட்ட பிறகு,இழுத்துக்கிட்டுப்போங்க........ உங்கக் காலைக் கும்பிடறேன்........... ஐயா! நீங்க பிள்ளே குட்டியைப் பெத்தவங்கதானே.

வே:- ஐயாவுங்களே! நானும் கும்படறேன்.

போ:- அதெல்லாம் ஸ்டேஷன் போனபிறகு, ஐயாகிட்டச் சொல்லணும். டே! ராஜாக்கண்ணு! புறப்படு.

வீ:- ஐயா! கொஞ்சம்ாவு இரக்கம் காட்டுங்களய்யா! தம்பி பிணத்தைப் போட்டுட்டு எப்படியய்யா, அண்ணன்காரன் வருவான்.

ரா:- அம்மா, அழாதே! இரக்கம் இரக்கம் என்று ஏனம்மா இல்லாத ஒன்றைக்கேட்கிருய். டாக்டரைக் கேட்டாயே இருந்ததா? எஜமானரை அப்பா கேட்டாரே, இருந்ததா? பைத்யம் உனக்கு:

(போலீசுடன் போகிருன்)

காட்சி—10

இடம்:— பாதை.

இருப்போர்:—போலீசார், ராஜாக்கண்ணு.

(ராஜாக்கண்ணு, கையில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிருன்.)

போ 34:— என்னமோ போண்ணேன்! எனக்கென்னமோ வர வர இந்த வேலையே பிடிக்கலே. அதிலேயும் இந்தமாதிரி சமயத்திலே ரொம்பக் கண்ருவியா இருக்கு.

போ 48:— அதைப் பாத்தா முடியுமா 34? டியூடின்னு டியூட்டிதானே! கண்ணைக்கசக்கினுகூட நாம்ப என்ன செய்யறது.—இவன் வீட்லே தம்பி செத்துப்போயிட்டானே, தகனம் செய்யறவரை, சும்மா இருக்கட்டும்னு சொல்லத்தான் வேணும்னு தோணுது. நமக்குமட்டும் இரக்கம் இல்லாமலா போகும்? ஆனு,விட்டா, பய, ஓடிடுவானே, பிறகு நாம்ப சஸ்பெண்டுதானே, ஏம்பா!நம்மபெண்டு பிள்ளைக கதி என்ன ஆகும்?

போ 34:— நீ சொல்லறதும் நியாயமாத்தான் இருக்கு. இவங்கிட்டவும் இரக்கமாத்தான் வருது.

(ஒரு ஆசாமி ஓடோடி வந்து,48ம் நம்பர் கான்ஸ்டபிளைப் பார்த்து.]

வந்:- மாமா! அக்காவை, பாம்பு கடிச்சிடிச்சி, ஓடிவா..........

48:— ஐயோ! என்னு! பாம்பா! அடிபொன்னி! ஐயயோ 34, என் சம்சாரத்தைப் பாம்பு கடிச்சிடிச்சாமே.

போ 34:—பதருதே 48, வீட்டுக்கு ஓடிப்போயி, ஏதாச்சும் மந்தரம் மருந்துபாரு. அட தெய்வமே! எவ்வளவு நல்லமனுஷரு, இவருக்கு இப்படி ஆபத்து வந்ததே.

போ 48:- 34! எனக்கு ஒரு இடமும் தெரியாதே.

போ 34:- அழாதே 48! அழாதே. பாம்புன்னு, வெறும் தண்ணிப்பாம்பாகூட இருக்கும், பயப்படாதே!

போ 48:- எந்தப்பாம்போ-என்ன ஆகுதோ — அவ ரொம்பப்பயங்காளிப்பா—பாம்புன்னுலே உயிர்போயிடுமே—எங்கேயாவது மந்திரக்காரன்...................

போ 34:- இருக்கு, ஒருவில்லிகிட்ட.........................

போ 48:- அந்த வில்லி...........

போ 34: ஏம்பா! அந்த இருளன், ஊர்க்கோடியிலே இல்லவா இருக்கருன்.

போ: 48- (பதறி) உலகத்துக் கோடியா இருந்தாக்கூட போகத்தானே வேண்டும். இரக்கம் துளிகூட இல்லையா உனக்கு. வாப்பா!

34:- இந்தப்பயலே...........

48:- இவனு? கிடக்கட்டும், பிறகு பார்த்துக்கொள்வோம்பா.

34:- ஓடிப்போயிட்டா?

(2ம் பக்கம் பார்க்க)


வெளிவந்துவிட்டன! மூன்று நூல்கள்!

ஒழ்வொன்றும் ஒரு சிந்தனை நிலையம்!

1. சிறந்த பேச்சாளர்கள்—

'தொடர்பன்' படப்பிடிப்பு.

திரு. வி. க; ச. சோ. பாரதியார்; ஈ. வே. ரா; ரா. பி. சேதுப்பிள்ளை; ஔவை சு. துரைசாமி; கி. ஆ. பெ. விசுவநாதம்; சி. என். அண்ணாத்துரை; உ. முத்துராமலிங்க தேவர்; ப. ஜீவானந்தம்; மா. பொ. சிவஞானம்—இப்பதின் மருடைய பேச்சாற்றலை உயிரோட்டமுள்ள நடையில் சித்தரிக்கும் அரியநூல், இதுவரை வெளிவந்ததில்லை.

விலை. ரூ. 1—0—0

2. கி. பி. 2000 ... ...

மு வரதராசனர், M. O. L. தீட்டியது. எதிர்காலச் சமூக அரசியல் கனவைக் கூறுவது. விலை. ரூ. 1—12—0

3 வருங்காலத் தமிழகம்

கா. அப்பாத்துரை M. A. L. T., எழுதியது. பாரதி தாசனின் முன்னுரையுடன் கூடியது. கருத்தாழமுள்ள நூல் என்று பலரால் புகழப்பட்டது.

விலை. ரூ. 1—0—0

தபாற் செலவு தனித்தனி இரண்டணு. விற்பனையாளருக்குத் தக்க கழிவு உண்டு.

**தமிழர் பதிப்பகம்**

81, லிங்க செட்டித் தெரு,

சென்னை—1.


Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.